கிருஷ்ணர் சூரியனைப் போன்றவர். மாயை இருளைப் போன்றது. கிருஷ்ணர் இருக்கும் இடத்தில் மாயைக்கு இடமில்லை.

# ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்



ஹரே கிருஷ்ண இயக்கத்தின் பத்திரிகை ஜனவரி 2011 ₹ 15/-





தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர்

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியர்

# ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்

**மலர் 3, இதழ் 1** **ஜனவரி 2011**

2 திருமணம், ஒரு புனிதமான பந்தம்
6 கலி யுகத்தின் தீய விளைவுகள்
11 மூழ்கும் மனிதன்
13 பணிவினால் பக்குவம் பெற்ற பிரதாபருத்ரர்
19 பிரபுபாதர் நூற்றந்தாதி
21 கடவுளை அறிவது எப்படி?
22 பகவத் கீதை உண்மையுருவில், ஒரு கண்ணோட்டம்
26 தொழில்நுட்பமும் வேலையில்லாத் திண்டாட்டமும்
29 ஸ்ரீமத் பாகவதம்

## ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்

**ஹரே கிருஷ்ண இயக்கத்தின் பத்திரிகை**

ஸ்ரீ ஸ்ரீமத் பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூர் அவர்களின் கட்டளையின்படி தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர், 1944இல் Back to Godhead என்ற பெயரில் ஓர் ஆங்கில பத்திரிகையை தொடங்கினார், அஃது இன்று வரை அவரைப் பின்பற்றுபவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. அப்பத்திரிகைக்கு அவரளித்த வழிகாட்டுதலைப் பின்பற்றி தமிழில் வெளிவருவதே *ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்*.

**பதிப்பாசிரியர்:** விஜய குமார் (விஜய கோவிந்த தாஸ்)

**தொகுப்பாசிரியர்:** ஸ்ரீ கிரிதாரி தாஸ்

**பிழைத் திருத்தம்:** அமுதவல்லி தேவி தாஸி, கேசவ பலராம தாஸ், சனக குமார தாஸ், பிரியதர்ஷினி ராதா தேவி தாஸி, ராதா மதுராபதி தாஸ், ராம கிங்கர தாஸ், ஜெய கிருஷ்ண தாஸ், ஜெய கோவிந்தராம தாஸ்

**வடிவமைப்பு:** ஸ்ரீ கிரிதாரி தாஸ்

**அட்டைப்பட வடிவமைப்பு:** கேசவன்

**அலுவலக உதவி:** சாது சைதன்ய தாஸ்

**தட்டச்சு உதவி:** விசித்ரா

**வெளியிடுவோர்:** பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை, சென்னை.

**பதிவு அலுவலகம்:** மனை எண் 9-10, செந்தில் அவென்யூ, காமராஜபுரம், செம்பாக்கம், சென்னை - 600 073. தொலைபேசி: (044) 22272920

**சந்தா அலுவலகம்:** 7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. தொலைபேசி: (044) 25514553, 98948 14553

**மின்னஞ்சல்:** btgtamil@pamho.net

**அச்சிட்டோர்:** MWN பிரஸ், சென்னை.

**பதிப்புரிமை** © 2011, பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை. அனைத்து உரிமைகளும் பதிப்பகத்தாருக்கு மட்டுமே.

பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை

## கேள்விகளும் கருத்துகளும்

**ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் குறித்த தங்களது கேள்விகளையும் கருத்துகளையும் சந்தா அலுவலகத்தில் தெரிவிக்கவும்.**

### எமது குறிக்கோள்

- உண்மை, போலி; ஆன்மீகம், பௌதிகம்; நிரந்தரமானவை, தற்காலிகமானவை—ஆகியவற்றைப் பிரித்துப் பார்க்கும் அறிவொளியை மக்களுக்கு வழங்குதல்
- ஜட வாழ்வின் தவறுகளை பகிரங்கப்படுத்துதல்
- ஆன்மீக வாழ்வின் வேத நுணுக்கங்களில் மக்களை வழிகாட்டுதல்
- வேதப் பண்பாட்டைப் பாதுகாத்து அதனைப் பரப்புதல்
- பகவான் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவினால் வழங்கப்பட்ட இறைவனின் திருநாம உச்சாடனத்தைப் பரப்புதல்
- முழுமுதற் கடவுளான ஸ்ரீ கிருஷ்ணரை நினைப்பதற்கும் அவருக்குத் தொண்டு செய்வதற்கும் உதவி செய்தல்

ஸ்தாபக ஆச்சாரியரின் ஆன்மீக உரை

மான்ட்ரியல், கனடா ஜுலை 22, 1968

# திருமணம், ஒரு புனிதமான பந்தம்

கிருஷ்ண பக்தர்களுக்கு இடையிலான திருமணம், ஆன்மீக உணர்வில் படிப்படியாக முன்னேற்றம் பெற உதவும்.

**வழங்கியவர்: தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர்**

ஆலோல-சந்த்ரக-லஸத்-வனமால்ய-வம்ஷீ-
ரத்னாங்கதம் ப்ரணய-கேலி-கலா-விலாஸம்
(பிரம்ம ஸம்ஹிதை 5.31)

இந்த ஸ்லோகத்தில் முழுமுதற் கடவுள் கோவிந்தனைப் பற்றிய வர்ணனை கொடுக்கப்பட்டுள்ளது. கோவிந்தன் உருவமற்றவர் அல்ல. "பூமாலையால் அலங்கரிக்கப்பட்டுள்ள அவர் தமது கைகளில் புல்லாங்குழலை ஏந்தியுள்ளார்" என்று இங்கு கூறப்பட்டுள்ளது. பிரணய-கேலி-கலா விலாஸம், "அவர் ராதாராணியுடன் தெய்வீக அன்பில் ஈடுபட்டுள்ளார்." எனவே, ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் காணப்படும் அன்பு இயல்பானதல்ல என்று கருதத் தேவையில்லை. இந்த அன்பு கடவுளிடமும் உள்ளது. வேதாந்த சூத்திரத்தின் துவக்கத்தில், அதாதோ பிரஹ்ம ஜிக்ஞாஸா, "பரம்பொருள் என்பது யாது?" என்ற கேள்விக்கு, ஜன்மாத்யஸ்ய யத:, "எங்கிருந்து எல்லாம் தோன்றியதோ, அதுவே பரம்பொருள்," என்று விளக்க மளிக்கப்பட்டுள்ளது. பரம் பொருளே எல்லாவற்றிற்கும் மூலமாக விளங்குகிறார் என்பதே இதன் பொருளாகும்.

இந்த ஜடவுலகில் ஆண்-பெண் உறவு மிகவும் முக்கிய மானதாகக் கருதப்படுகிறது. மனித சமுதாயத்தில் மட்டுமின்றி, பூனைகள், நாய்கள், பறவைகள் என எல்லா உயிரினங்களிலும் ஆண்-பெண் ஈர்ப்பு உள்ளது. அஃது ஏன்? அதற்கான பதில், ஜன்மாத்யஸ்ய யத:, என்று வேதாந்த சூத்திரத்தில் கூறப்பட்டுள்ளது. இந்த ஈர்ப்பு பரம்பொருளிடம் இருக்கும் காரணத்தினால், இந்த ஜடவுலகிலும் அஃது உள்ளது. பரம்பொருளிடம் ஈர்ப்பு இல்லாவிடில், இவ்வுலகத்தில் எவ்வாறு அது வெளிப்பட்டிருக்க முடியும்?

வேத வழக்கத்தின்படி ஒவ்வொரு வரும் வேதாந்த சூத்திரத்தைக் கடை பிடிக்க வேண்டும். அருவவாதிகள், உருவவாதிகள் என இருவகையான தத்துவவாதிகள் உள்ளனர். உருவவாதி களான வைஷ்ணவர்கள், பரம்பொருள், உருவமுடைய ஒரு நபர் என்று ஒப்புக்கொள்கின்றனர்; ஆனால் அருவவாதிகளான மாயாவாதிகள் பரம்பொருள் அருவமானது (உருவம் இல்லாதது) என்று கூறுகிறார்கள். இதுவே வித்தியாசம். நமது வைஷ்ணவ தத்துவவாதிகள், பரம்பொருள் எவ்வாறு உருவமின்றி இருக்க முடியும்? என்று வாதிடுகின்றனர். இவ்வுலகில் நாம் காணும் அனைத்திற்கும் உருவம் உள்ளது. எனவே, உருவம் எனப்படும் குறிப்பிட்ட தனித்துவம் பரம்பொருளிடம்



இல்லாவிடில், அவரிடமிருந்து தோன்றிய இவ்வுலகில் எவ்வாறு உருவங்கள் இருக்க முடியும்?

நாங்கள் சொல்ல வருவது யாதெனில், கணவன் மனைவிக்கு இடையிலுள்ள இந்த அன்பு இயல்பானதல்ல என்று கூற முடியாது. ஏனெனில் இத்தகு அன்பு பரம்பொருளிடமும் உள்ளது. பரம்பொருளான முழுமுதற் கடவுள் ஸ்ரீ கிருஷ்ணர், ராதாராணியுடன் தெய்வீக அன்பில் ஈடுபட்டிருப்பதாக வேதங் களிலிருந்து நாம் அறிகிறோம். ராதா கிருஷ்ணரின் அந்த அன்புப் பரிமாற்றம் இந்த ஜடவுலகத்திலும் வியாபித்திருக்கிறது; ஆனால் இங்கு அது நெறிதவறிய பிம்பமாக உள்ளது. இந்த ஜடவுலகத்திலுள்ள அன்பு உண்மையான அன்பு அல்ல. இது காமம் எனப்படுகிறது. இங்கு ஆண்களும் பெண்களும் அன்பினால் கவரப்படவில்லை; காமத்தினால் கவரப்படுகிறார்கள். கிருஷ்ண பக்தி இயக்கத்திலுள்ள நாங்கள் பரம்பொருளை அணுக முயற்சி செய்வதால். காம எண்ணத்தை தூய்மையான அன்பாக மாற்ற முயற்சிக்கிறோம். இன்றும்கூட வேதக் கோட்பாடுகளை சிரத்தையுடன் கடைபிடிப்பவர்களிடம், இந்த காமம், ஆன்மீகமாக ஒழுங்குபடுத்தப்படுகிறது. அஃது எவ்வாறு? திருமணத்திற்கு முன்பு ஆண்களும் பெண்களும் கட்டுப்பாடற்ற முறையில் பழகுவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. நம்முடைய மாணவர்களில் ஒருவர் இந்தியா சென்றிருந்தபோது, ஓர் இளம் பெண்ணுடன் தெருவில் பேச முற்பட்டார், அச்செயல் குற்றமாகக் கருதப்பட்டது. அவருக்கு ஒரே ஆச்சரியம். இளவயது ஆண்களும் பெண்களும் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளும் வழக்கம் இந்தியாவில் கிடையாது. ஆனால் உண்மையில் தற்போது நிலைமை மாறிவிட்டது. நாங்கள் பார்த்துள்ளோம்—எங்கள் இளமைக்காலம் வரை—திருமணமாகாமல் ஆணும் பெண்ணும் கலந்திருக்க முடியாது. இதன் மூலம் காமம் என்னும் கவர்ச்சி ஓரளவிற்குக் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. பெண்ணின் பெற்றோரும் பையனின் பெற்றோரும் துணையைத் தேர்வு செய்வார்கள். சுயமாகத் தேர்வு செய்தல் என்பது கிடையாது. பெற்றோர்களின் தேர்வு ஜாதகத்தின் அடிப்படையில் விஞ்ஞானப் பூர்வமாகக் கணித்து செய்யப்படும். "இப்பெண்ணிற்கும் பையனுக்கும் பொருத்தம் எப்படி உள்ளது? அவர்களது வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்குமா?" என பல விஷயங்கள் ஆலோசிக்கப்படுவது வழக்கம். அவையனைத்தும் சரிபார்க்கப் பட்ட பிறகே திருமணம் நடைபெறும். இதுவே பண்டைய இந்திய வேதக் கோட்பாடாகும்.

சுதந்திரமான காதல் என்பது நமக்குத் தெரிந்தவரை அரச குடும்பங்களிலும் உயர் குடும்பங்களிலும் மட்டுமே அனுமதிக்கப்பட்டிருந்தது; ஏனெனில், அப்பெண்கள் அறிவில் முதிர்ந்தவர்களாக இருந்தனர். கணவனைத் தேர்வு செய்யும் வாய்ப்பு அப்பெண்களுக்குக் கொடுக்கப்பட்டது, ஆனால் அதுவும் நேரிடையாக அல்ல. "நான் அந்த பையனைத் திருமணம் செய்துகொள்ள ஆசைப்படுகிறேன்," என்று அப்பெண்கள் தங்களது விருப்பங்களை பெற்றோரிடம் வெளிப்படுத்தலாம்—இதை நாம் வேத இலக்கியங்களில் சரித்திரப்பூர்வமான பல ஆதாரங்களின் மூலம் காணலாம். இவை அரச குடும்பத்தினர் மத்தியில் நடப்பவை, மற்றவர்கள் மத்தியில் இவை நடைபெறுவதில்லை. மேலும் பெண்ணின் தகப்பனார் ஒரு போட்டியை வைப்பார்; அப்போட்டியில் வெற்றி பெறுபவருக்கு தகப்பனார் தனது பெண்ணை வழங்குவார்.

## யுக்த வைராக்யம்

வைஷ்ணவ கலாச்சாரத்தில் திருமணம் அனுமதிக்கப்படுகிறது. ஆண் இருக்கிறான், பெண் இருக்கிறாள்; அவர்கள் இருவரும் ஏன் சேர்ந்து இருக்கக் கூடாது? ஆனால் அது சட்டவிரோதமாக இருக்கக் கூடாது. நான் முதலில் நியூயார்க் நகருக்கு வந்தபோது, பல இளைஞர்களும் பெண்களும் என்னுடைய சிஷ்யர்களாக மாற விருப்பம் தெரிவித்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் பெண் தோழியையும் ஆண் தோழரையும் கொண்டிருந்தனர். எனவே, நான் அவர்களிடம், "ஆன்மீக வாழ்வில் நீங்கள் முன்னேற வேண்டுமானால், நான்குவிதமான பாவச் செயல்களிலிருந்து விலகியிருக்க வேண்டும். தகாத உடலுறவு, அசைவ உணவு, போதை வஸ்துக்கள், சூதாட்டம்—இந்நான்கு பாவச் செயல்களி லிருந்து விலகவில்லையெனில் ஒருவர் ஆன்மீக வாழ்வில் முன்னேற்றம் காண முடியாது," என்று கூறினேன். கடவுள் புனிதமானவர், *பவித்ரம் பரமம் பவான்*, எந்த ஒரு தூய்மையற்ற ஆத்மாவும் அவரை அணுக முடியாது. நமது உடல், அசுத்தத்தின் அடையாளமாகும்; ஏனெனில், ஆத்மாவிற்கு ஜடவுடல் கிடையாது. எனவே, இந்த ஜடவுலகில் ஜடவுடலை உடையவர்களாக யாரெல்லாம் இருக்கின்றார்களோ, அவர்கள் அனைவருமே பாவப்பட்டவர்கள் என்று கருதப்படுகின்றனர். இதிலிருந்து நாம் எவ்வாறு விடுபடுவது? எல்லா வற்றையும் ஆன்மீக வாழ்க்கையுடன்

**ஆன்மீக வாழ்வில் முன்னேற வேண்டுமானால், தகாத உடலுறவு, அசைவ உணவு, போதை வஸ்துக்கள், சூதாட்டம் ஆகிய நான்கு பாவச் செயல்களிலிருந்து நீங்கள் விலக வேண்டும்; இல்லையேல், முன்னேற்றம் காண முடியாது,**

**பால் குடித்ததினால் உண்டான நோய், பால் சம்பந்தப்பட்ட பொருளுடன் கலந்த மருந்தினால் குணப்படுத்தப்படுகிறது. அதுபோலவே ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலுள்ள காமத்திற்குச் சரியான முறையில் சிகிச்சை அளித்தோமெனில், அதுவே கடவுளின் மீதான அன்பாக மாறும்.**

சம்பந்தப்படுத்துவதன் மூலம் நாம் விடுபட முடியும். நிர்பந்த: க்ருஷ்ண-ஸம்பந்தே யுக்தம் வைராக்யம் உச்யதே (பக்தி ரஸாம்ருத ஸிந்து 1.2.255).

பாலை உதாரணமாக எடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் அதிகமான பாலை அருந்தினால் வயிற்றுக் கோளாறு உண்டாகும். ஆனால் அதற்காக ஆயுர்வேத மருத்துவரை அணுகினால் அவர் சில மருந்துகளுடன் தயிரை சேர்த்துக் கொடுப்பார். பால் குடித்ததினால் உண்டான நோய், ஒரு மருத்துவரின் கண்காணிப்பில் பால் சம்பந்தப்பட்ட பொருளுடன் கலந்த மருந்தினால் குணப்படுத்தப்படுகிறது. "நான் பால் குடித்ததால் நோய்வாய்ப்பட்டேன், நீங்கள் பாலால் தயாரிக்கப்பட்ட வேறொரு பொருளை மருந்தாக அளிக்கிறீர்களே," என்று நோயாளி மருத்துவரிடம் கேட்க முடியாது. மருத்துவர் சிபாரிசு செய்கிறார், நோயும் குணமடைகிறது. அதுபோலவே ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலுள்ள காமத்திற்குச் சரியான முறையில் சிகிச்சை அளித்தோமெனில், அதுவே கடவுளின் மீதான அன்பாக மாறும்.

நான் ஒரு சந்நியாசி, குடும்ப வாழ்க்கையைத் துறந்தவன். எனக்குக் குழந்தைகளும் பேரக் குழந்தைகளும் உள்ளனர், மனைவியும் உயிருடன் உள்ளாள். ஆனால் நான் அவர்களிடமிருந்து பிரிந்துவிட்டேன். இதுவே சந்நியாஸம் என்று அழைக்கப்படுகிறது. பிறகு நான் ஏன் எனது சீடர்களின் குடும்ப வாழ்வில் அக்கறை காட்டுகிறேன்? ஏனெனில் அவர்கள் தங்களது ஆன்மீக வாழ்க்கையில் சரியான முறையில் முன்னேற்றமடைவதை நான் காண விரும்புகிறேன். ஆகவே, திருமணச் சடங்குகளில் பங்கேற்பது ஒரு சந்நியாசியின் வேலையல்ல என்ற போதிலும், பாவச் செயல்களிலிருந்து என்னுடைய மாணவர்களைக் காப்பதற்காக நான் தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்துகிறேன்.* அவர்கள் நன்னடத்தையுள்ள பையன்களாகவும் பெண்களாகவும் திருமணத்தின் மூலம் மாறுவார்கள் என்பது தெளிவு. அவ்வாறு திருமணம் செய்து கொண்டு குழந்தைகளுடன் மகிழ்ச்சியாக வாழ்க்கை நடத்தும் அத்தகைய பெண்களையும் பையன்களையும் பார்க்கும்போது நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இக்கூட்டத்தில் அவ்வாறு பலரும் வந்துள்ளனர். அவர்களின் முகத்தையும் செயல்களையும் பார்த்தாலே, அவர்கள் ஆனந்தமாக இருப்பதை நம்மால் உணர முடிகிறது.

## திருமண வாழ்வின் நோக்கம்

இந்த கிருஷ்ண பக்தி இயக்கத்திலுள்ள பையனோ பெண்ணோ திருமணம் செய்துகொள்ள விரும்பினால், அதற்கு நான் உதவி செய்கிறேன். ஆனால் இத்திருமணமானது புலனின்பத்திற்காக அல்ல என்பதை பெண்ணும் பையனும் நிச்சயமாகத் தெரிந்துகொள்ள வேண்டும். இத்திருமணம், வாழ்க்கையைப் புனிதப்படுத்திக் கொள்வதற்காகவே. எனவே, விவாகரத்து என்ற கேள்விக்கே இடமில்லை. அத்தகு மனோபாவம் இருந்தால் திருமணம் செய்துகொள்ளக் கூடாது. கிருஷ்ண பக்தியை அடைவதே நமது அடிப்படைக் கொள்கை, மற்றவை அனைத்தும் இரண்டாம் தரமானவை. உங்களால் கிருஷ்ண உணர்வுடன் கூடிய நல்ல குழந்தைகளை பெற்றெடுக்க முடிந்தால், மனித சமுதாயத்திற்கு அதுவே நீங்கள் செய்யும் மிகப்பெரிய தொண்டாக அமையும். ஏனெனில், தற்போதைய மனித சமுதாயம் நாய்களையும் பூனைகளையும் போன்று குழந்தைகளை பெற்றெடுத்து பெரிய பிரச்சனையை உருவாக்கியுள்ளது. இத்தகு விலங்குகளின் சமுதாயத்தில் எவ்வாறு நீங்கள் அமைதியையும் அபிவிருத்தியையும் நல்லதிர்ஷ்டத்தையும் எதிர்பார்க்க முடியும்? எனவே, கிருஷ்ண உணர்வுடன் கூடிய குழந்தைகளைப் பெற்றெடுத்து அவர்களுக்கு ஆரம்பத்திலிருந்தே பயிற்சி கொடுப்பது அவசியமாகிறது. நம்முடைய மாணவர்களில் சிலர், சான்பிரான்ஸிஸ்கோ நகரத்திலுள்ள எமது குருகுலத்தில் பயிற்சி அளிக்கப்படுகின்றனர் என்பதை அறிய நீங்கள் சந்தோஷப்படுவீர்கள். அவர்கள் ஆச்சரியமான முறையில் முன்னேற்றம் கண்டுள்ளனர். இங்குள்ள பையன்கள் மீதும் பெண்கள் மீதும் எந்தத் தவறும் இல்லை. அவர்கள் சரியான முறையில் பயிற்றுவிக்கப்படவில்லை. இங்கு மட்டுமல்ல; உலகின் எந்தப் பகுதியிலும் கல்விமுறை திருப்திகரமானதாக இல்லை. ஆரம்பக் காலத்திலிருந்தே அவர்கள் தாராளமாகப் பழகுவதற்கும், கட்டுப்பாடற்ற உறவை அனுபவிப்பதற்கும் அனுமதிக்கப்படுகிறார்கள். இஃது அவர்களுடைய உடல் நலத்திற்கோ படிப்பிற்கோ நல்லதல்ல. தற்போதைய கல்விமுறையின் விளைவுகளை ஹிப்பிகளின் வடிவில் நாம் காண்கின்றோம். எனவே, சமுதாயத்தின்

---

* 1968இல், வேத முறையிலான திருமணத்தைப் பற்றிய தகவலும் வழிமுறையும் அமெரிக்க மக்களிடம் கிடையாது என்பதும், அவ்வழிமுறையை ஸ்ரீல பிரபுபாதர் அறிந்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

*பிதா ந ஸ ஸ்யாஜ் ஜனனீ ந ஸ ஸ்யாத், "தங்களது குழந்தைகளை மரணத்திலிருந்து காப்பாற்ற இயலாதவர்கள், தாயாகவோ தந்தையாகவோ ஆகக் கூடாது." ஸ்ரீமத் பாகவதம் (5.5.18)*

பாதுகாவலர்களாக உள்ளவர்கள், இவற்றை ஆழ்ந்த யோசனையுடன் சிந்தித்து, வாழ்க்கையைக் கட்டுப்பாடுள்ளதாக மாற்றிக்கொள்ள வேண்டும்.

நாம் இந்த ஜடவுடலை பெற்றிருப்பதால், உண்ண வேண்டும், உறங்க வேண்டும், பாலுறவில் ஈடுபட வேண்டும்—இவையனைத்தும் உடலின் தேவைகள், அமைதியைக் குலைப்பவை. ஆனால் இவை கிருஷ்ண உணர்வின் மூலம் கட்டுப்படுத்தப்பட்டால், அமைதியைக் குலைக்கும் விஷயங்களாக அல்லாமல், கிருஷ்ணரைப் புரிந்து கொள்வதில் நம்மை முன்னேற்றுபவையாக மாறும். நல்ல குழந்தைகளை பெறுதல், மனித குலத்திற்கான உயர்ந்த சேவையாக அமையும். பூனைகளையும் நாய்களையும் பெற்றெடுக்காதீர்கள். இதுவே என்னுடைய வேண்டுகோள். நல்ல குழந்தைகளைப் பெறாவிடில், குழந்தைகளைப் பெறாமல் இருப்பதே நல்லது. திருமணம் செய்யாமல் பிரம்மசாரியாக வாழுங்கள். பிதா ந ஸ ஸ்யாஜ் ஜனனீ ந ஸ ஸ்யாத், "மரணத்திலிருந்து குழந்தைகளைக் காப்பாற்ற முடியாதவர்கள், தாயாகவோ தந்தையாகவோ ஆகக் கூடாது," என்று ஸ்ரீமத் பாகவதம் (5.5.18) கூறுகின்றது.

இதன் பொருள் என்ன? நீங்கள் உங்கள் குழந்தைகளை கிருஷ்ண பக்திக்கு வருவதற்கு தயார்படுத்தினால், இப்பிறவியிலேயே உங்கள் குழந்தைகள் இறைவனின் திருநாட்டிற்குத் திரும்பிச் செல்ல முடியும். இதுவே குறிக்கோளாக இருக்க வேண்டும். நீங்கள் இப்பிறவியிலேயே இறைவனிடம் திரும்பிச் செல்ல முயற்சிப்பதுபோல, உங்கள் குழந்தைகளுக்கும் நீங்கள் பொறுப்பேற்றுக் கொண்டால், அவர்களும் இப்பிறவியிலேயே இறைவனிடம் திரும்பிச் செல்ல முடியும். "இக்குழந்தை என்னுடைய கர்ப்பத்திலிருந்து பிறவி எடுத்துள்ளது. இதுவே இவனது இறுதிப் பிறவியாக இருக்க வேண்டும். எந்த ஒரு விலங்கு, அல்லது மனித உடலின் கர்ப்பத்திலும் இவன் மீண்டும் பிறவியெடுக்கக் கூடாது," என்று தாயானவள் நினைக்க வேண்டும். இதுவே ஒவ்வொரு தாய் தந்தையின் பொறுப்பாகும்.

உண்ணுதல், உறங்குதல், இனவிருத்தி செய்தல், தற்காத்தல் ஆகியவற்றிற்கு நாங்கள் தடை விதிப்பதில்லை. ஆனால் அவற்றை கிருஷ்ணரின் தொடர்பில் செய்ய வேண்டுமென வலியுறுத்துகிறோம். இதன் மூலம் இவ்வாழ்விலும் மறுவாழ்விலும் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்!

மிக்க நன்றி.

(தமிழாக்கம்: ஜெயகோவிந்தராம தாஸ்)

# கலி யுகம்



கலி யுகத்தின் அறிகுறிகள் மிகவும் தீவிரமாக உள்ளன, 4,32,000 வருடங்களைக் கொண்ட கலி யுகத்தில் நாம் வெறும் 5,000 வருடங்களை மட்டுமே கடந்துள்ளோம். இந்த 5,000 வருடங்களுக்கே இத்தனை கஷ்டங்கள், இன்னும் போகப் போக துன்பங்கள் அதிகமாகிக் கொண்டே போகும். எனவே, சிறந்த வழி யாதெனில், இப்பிறவியிலேயே கிருஷ்ண உணர்வின் பூரண நிலையை அடைந்து, இறைவனின் திருநாட்டிற்குத் திரும்பிச் செல்வதேயாகும். கிருஷ்ண பக்தி உங்களைக் காப்பாற்றும், இல்லையெனில் நீங்கள் இதே உலகத்திற்குத் திரும்பி வந்தால் கஷ்ட காலம் காத்திருக்கிறது. நமக்கு மேன்மேலும் துன்பங்கள் வரவிருக்கின்றன.

—தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர்,
ஸ்ரீமத் பாகவத உரை, ஏப்ரல் 24, 1973, லாஸ் ஏஞ்சல்ஸ்

# கலி யுகத்தின் தீயவிளைவுகள்

கலி யுகத்தின் சக்திவாய்ந்த ஆதிக்கத்தின் காரணத்தால் தர்மம், சத்தியம், தூய்மை, பொறுமை, கருணை, ஆயுள், தேகபலம், ஞாபகசக்தி ஆகியவை நாளுக்கு நாள் குறைந்து கொண்டே போகும். (ஸ்ரீமத் பாகவதம் 12.2.1)

**வழங்கியவர்: தவத்திரு பக்தி விகாஸ ஸ்வாமி**

## கலி யுகத்தின் தோற்றம்

ஆன்மீகம் குன்றிய தற்போதைய கலி யுகம் சண்டையும் ஏமாற்றமும் நிறைந்த யுகம் என்று வேத சாஸ்திரங்கள் விவரிக்கின்றன. சப்தரிஷி மண்டலம் மகர நட்சத்திரத்தைக் கடந்து சென்றபோது கலி யுகம் தோன்றியது என்று ஸ்ரீமத் பாகவதம் (12.2.31) கணித்துள்ளது. கி.மு.3102, பிப்ரவரி மாதம் 20ஆம் தேதி அதிகாலை 2:27 மணிக்கு கலி யுகம் ஆரம்பமானதாக ஜோதிட வல்லுநர்கள் கணித்துள்ளனர். பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் பகவத் கீதையை அர்ஜுனனுக்கு உபதேசித்து சுமார் 36 வருடங்களுக்குப் பிறகு கலி யுகம் தோன்றியது.

## கீழ்த்தரமான மக்கள்

4,32,000 ஆண்டுகளைக் கொண்ட இக்கலி யுகத்தில், மனித சமுதாயம் படிப்படியாகச் சற்றும் பண்பாடற்ற நிலைக்கு மாறி வருகிறது. தூய்மை, மரியாதை போன்ற நல்லொழுக்கங்கள் மக்களிடம் இல்லை; பேராசை, தீய நடத்தை, இரக்கமின்மை போன்ற குணங்கள் பெருகிவிட்டன. கலி யுகத்தின் மனிதர்களைப் பயனற்றவர்களாகவும் கீழ்த்தரமான உள்ளுணர்ச்சிகளால் தூண்டப்பட்டவர்களாகவும் லிங்க புராணம் விவரிக்கின்றது. உணவுக்காக உயிர்களைக் கொல்லும் இவர்கள், போதைப் பொருள்களிடம் அடிமையாகி, நல்லது எது, தீயது எது என்பதைப் பகுத்தறிய முடியாதவர்களாக வாழ்கின்றனர். புலன்களின் இடைவிடாத உந்துதலால் தூண்டப்பட்டு, எல்லைகளை மீறி தவறான உறவில் ஈடுபடுகின்றனர்.

காமத்தினால் பெறப்பட்ட கீழ்த்தரமான தலைமுறையினர், உலகில் முரட்டுத்தனமான வேகத்தில் வளர்ந்து வருகின்றனர். மதவெறியர்கள், தீவிரவாதிகள், மற்றும் போலி ஆன்மீக வாதிகளின் கூடாரங்கள் அனைத்தும் புலனின்பமே பிரதானம் என்னும் கொள்கையில் மூழ்கியுள்ள மக்களால் நிரம்பியுள்ளன.

## முறையற்ற ஜாதி முறை

ஒருவருக்கொருவர் ஒத்துழைத்து வாழும் சமுதாயப் பிரிவுகளான பிராமணர்கள் (பூஜாரிகள், கல்விமான்கள்), சத்திரியர்கள் (அறிவார்ந்த அரசர்கள்), வைசியர்கள் (நியாயமான வியாபாரிகள்), சூத்திரர்கள் (நம்பிக்கைக்குரிய பணியாட்கள்) ஆகியோர்களைக் கொண்ட பண்டைய நாகரிகம் தற்போது இல்லை. உயர்குடியில் பிறந்துவிட்டோம் என்ற ஒரே காரணத்தைக் கொண்டு, அதிகாரத்தையும் பதவியையும் உரிமையுடன் கேட்கின்றனர்; சமுதாய நன்மைக்கான தங்களது கடமைகளை இவர்கள் செய்வதில்லை, மாறாக, தாழ்ந்த குலமக்களை அடிக்கடி துன்புறுத்துவதால், தாழ்ந்த குலமக்கள் உயர் குடியினரை எதிர்ப்பதுடன் அவர்களைக் கவிழ்த்தும் விடுகின்றனர். ஆதலால் உண்மையான பிராமணர்களையும் சத்திரியர்களையும் தற்போது காண முடிவதில்லை, வைசியர்களின் நிலையும் அதுவே.




கலி யுகத்தின் இருளில் மூழ்கியுள்ளவர்களுக்கு ஸ்ரீமத் பாகவதம் ஒளியை வழங்குகின்றது.



இயற்கைச் சீற்றங்கள், வன்முறைத் தாக்குதல், உணவுப் பற்றாக்குறை, சண்டை சச்சரவுகள் போன்றவை கலி யுகத்தின் அன்றாட நிகழ்வுகள்

## அர்த்தமற்ற வழிபாடுகள்

மிகவும் இழிவானவர்களும் கொள்கையற்றவர்களும் பெயரளவில் ஆன்மீகத் தலைவர்களாகி, ஏமாறத் தயாராக இருக்கும் மக்களைத் தவறாக வழிநடத்துகின்றனர். கற்பனையான கடவுள்கள் போலியான ஆஸ்ரமங்களில் வழிபடப்படுகின்றனர்; அங்குள்ள வழிபாட்டு முறை, தவம், தானம் என அனைத்தும் கற்பனையானவை. சமயச் சடங்குகள் அனைத்தும் பெயருக்காகவும் புகழுக்காகவும் மட்டுமே செய்யப்படுகின்றன. புனித நூல்களுக்கு உரிய மரியாதை அளிக்கப்படாததால் சமூகம் ஆன்மீக வழிகாட்டுதலை இழந்து நிற்கின்றது. நாஸ்திகம் வளர்கிறது, சில சமயங்களில் ஆன்மீகத்தின் போர்வையில். மக்கள் தங்களை அதிபுத்திசாலிகளாக எண்ணிக் கொண்டிருந்தாலும், அர்த்தமற்ற தத்துவங்களில் நம்பிக்கை கொண்டிருப்பதால், முட்டாள்களாகவே உள்ளனர். இவ்வாறு, தவறான நம்பிக்கைகளும் தவறாக வழிகாட்டும் போதனைகளும் உலகம் முழுவதும் பரவியுள்ளன.

## துன்பத்திற்குள்ளாகும் மக்கள்

தொன்றுதொட்டு விளங்கிய மன்னராட்சி அழிந்து விட்டது. அரசாங்கத் தலைமைப் பொறுப்புகளை ஏற்கும் கொள்கையற்ற நபர்கள், மக்களைப் பாதுகாப்பதற்குப் பதிலாக அதிகமாக வரி வசூலித்து அவர்களைத் துன்புறுத்துகின்றனர். குற்றவாளிகளான பலர் கைகோர்த்து பொதுமக்களைத் துன்புறுத்துகின்றனர், மக்கள் அனைவருமே அடிமைகளாகி மடிகின்றனர். குறிப்பாக, சாதுக்கள், ஆசிரியர்கள், புத்திமான்கள், தத்துவஞானிகள் ஆகியோர் மிகவும் துன்பத்திற்குள்ளாகின்றனர்.

## பணமும் ஏழ்மையும்

கலி யுக மக்கள் மனசாட்சியின்றியும் நீதி நேர்மையின்றியும் பணத்தை மட்டுமே தேடுகின்றனர். கொலை, ஏமாற்றுதல், இலஞ்சம் ஆகியவற்றால் செல்வந்தராக மாறியவர்கள் உயர்ந்த வகுப்பினராக மதிக்கப்படுகின்றனர். பணத்தால் அதிகாரத்தையும் நியாயத்தையும் விலைக்கு வாங்கிவிடும் நிலை உள்ளது.

ஏழைகள் பணக்காரர்களின் அடிமைகளாகின்றனர். விவசாயிகள் கிராமங்களை விட்டு இடநெருக்கடி மிகுந்த நகரத்திற்குக் குடிபெயர்ந்து இன்னல்களுக்கு உட்படுகின்றனர். பலர் சரியான உடைகூட இல்லாமல், ஒரே உடையைத் தினமும் உடுத்திக் கொள்கிறார்கள். வயிற்றை நிரப்புவதே ஏழைகளின் முக்கிய குறிக்கோளாக உள்ளது, ஆயிரக்கணக்கான மக்கள் வேலை கிடைக்காமல் தெருக்களில் திரிந்து கொண்டும் தங்களது ஏழ்மையை நிந்தித்துக் கொண்டும் வாழ்கின்றனர்.

## பொறுப்பற்ற திருமணங்கள்

திருமணம் ஒரு புனிதமான பந்தம் என்ற காலம் மலையேறிவிட்டது. அப்படியே திருமணம் செய்பவர்களில் பெரும்பாலானோர் விவாகரத்து கோருகின்றனர். திருமணம் செய்யாமல் வெறும் சிற்றின்பத்திற்காக இணைந்து வாழ்வோர் பலர், காம சுகத்திற்காக தேகத்தை அழகுபடுத்திப் பராமரிப்பதே மக்களின் முக்கியமான நோக்கமாக உள்ளது. தங்களது பாரம்பரிய கடமைகளையெல்லாம் ஒதுக்கிவிட்டு, ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அலையும் பெண்கள், ஆண்களால் தகாத முறைகளில் பயன்படுத்தப்பட்டு பின்னர் கைவிடப்படுகின்றனர்.

குலம், இனம், குடும்பம் போன்ற பந்தங்கள் மறக்கப்பட்டுவிட்டன. குடும்பங்கள் பிளவுபட்டுள்ளன. வயதான பெற்றோர்களைப் பிள்ளைகள் கவனித்துக் கொள்வதில்லை, தங்களது குழந்தைகளையும் பராமரிப்பதில்லை, குழந்தைகள் தங்களது அன்னை

யாலேயே கருவில் கொல்லப்படுகின்றனர், தப்பிப் பிழைத்த குழந்தைகளும் கொடுமையாக நடத்தப்பட்டு பிறகு கைவிடப்படுகின்றனர்.

## தூய்மையற்ற நெறிகள்

இந்த யுகத்தின் மக்கள், உணவு உண்ட பிறகும், மல ஜலம் கழித்த பிறகும், தங்களை தூய்மைப்படுத்திக் கொள்வதில்லை. பிரம்மசரியம் என்பது கடைபிடிக்கப்படாத ஒன்றாகவும், சில சமயங்களில் கேள்விப்படாத ஒன்றாகவும் உள்ளது. பொய்யும் பித்தலாட்டமும் அன்றாட வழக்கம். கெட்ட வார்த்தைகள் நடைமுறை வார்த்தைகளாகிவிட்டன. சீர்மிகு நீதி நெறிமுறைகள் பின்பற்றப் படுவதில்லை—ஒவ்வொருவரும் சொந்த நெறிகளை உருவாக்கி அதன்படி வாழ்கின்றனர், அத்தகு வாழ்க்கை சரியானதாக ஏற்கப்படுகிறது.

## இயற்கையின் அழிவு

மக்கள் நாகரிகமின்றி மிருக வாழ்க்கை வாழ்வதால், பஞ்சம், தொற்றுநோய், இயற்கைச் சீற்றங்கள் போன்றவற்றின் வடிவில் கர்மவினை அவர்களை வாட்டுகின்றது. அசுத்தம், பசி, மற்றும் பயம் எங்கும் பரவியுள்ளன. இயற்கையைத் துன்புறுத்துவதால் தன்னை உயர்ந்தவன் என்று மனிதன் நினைத்துக் கொண்டாலும், தூய உணவு, காற்று, அல்லது நீர் அவனுக்குக் கிடைப்பதில்லை. மாசடைந்த மனமுடையோர், நிலம், நீர், ஆகாயம் என அனைத்தையும் மாசுபடுத்துகின்றனர். மாசடைந்த அழுகிய பொருள்களால் மக்கள் தொற்று நோய்களுக்கு உள்ளாகின்றனர். பல்வேறு புத்தம்புது வியாதிகள் தோன்றி, இயற்கைக்குப் புறம்பான, செயற்கையான வாழ்க்கை வாழும் பெரும்பாலான மக்களைப் பாதிக்கின்றன.


## வாழ்க்கைப் போராட்டம்

இன்பமோ ஆனந்தமோ இன்றி வாழ்க்கை கடினமானதாகிவிட்டது. மக்கள் நம்பிக்கையிழந்து மனசோர்வுக்கு உள்ளாகும்போது, தற்கொலை செய்து கொள்வதும் பைத்தியமாகுவதும் சகஜமாகிவிட்டன.

தேவையற்ற வன்முறை, கொடூரம், மற்றும் இம்சைகளில் மக்கள் ஆனந்தம் காண்கின்றனர். கொலை என்பது தினசரி வாழ்க்கையின் நிகழ்வாகிவிட்டது. மக்கள் தங்களது வீடுகளில் பாதுகாப்பாக வாழ முடிவதில்லை. விலங்குகளை சகஜமாகக் கொல்வதற்கு மனிதன் அறிந்து கொண்டுள்ளான், அதை அப்படியே தனது சக மனிதனிடமும் செயல்படுத்துகிறான். வீடு போர்க்களமாகிவிட்டதால் உலக மக்கள் அனைவரும் பூமியில் சுற்றித் திரியும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். பூமியின் பெரும்பாலான பகுதிகள் இடைவிடாத போரினால் பாதிக்கப்பட்டு வருகின்றன.

## ஸ்ரீமத் பாகவதத்தின் தீர்வு

இவ்வுண்மைகள் யாவும் பல்வேறு புத்தகங்களில் விளக்கப்பட்டுள்ளன; அதுமட்டுமின்றி, அனைத்துச் செய்தித்தாள்களிலும் இந்நிகழ்வுகளை தினமும் படிக்கலாம். அதிர்ஷ்டவசமாக,






*கலியுகம் கடலளவு குற்றங்கள் நிறைந்ததாக இருந்தாலும், ஹரே கிருஷ்ண மந்திரத்தை உச்சரித்தால் போதும், மிகவுயர்ந்த முக்தியை எளிமையாக அடைய முடியும்.*

இந்நிலைமையை தீவிரமாக ஆராய்ந்துள்ள ஸ்ரீமத் பாகவதம் காலத்திற்கேற்ற தகுந்த தீர்வையும் வழங்கியுள்ளது:

“இக்கலி யுகம் கடலளவு குற்றங்கள் நிறைந்ததாக இருப்பினும், இந்த யுகத்தில் ஒரு நல்ல குணமும் இருக்கின்றது. அஃது என்னவெனில், ஹரே கிருஷ்ண மஹா மந்திரத்தை உச்சரித்தால் போதும், பௌதிக பந்தங்களிலிருந்து விடுபட்டு உன்னதமான இறைவனின் தெய்வீகத் திருநாட்டிற்குச் செல்ல முடியும்.” (ஸ்ரீமத் பாகவதம் 12.3.51)

ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண, ஹரே ஹரே/ ஹரே ராம, ஹரே ராம, ராம ராம, ஹரே ஹரே என்னும் மஹா மந்திரத்தை ஜபிப்பவர்கள் கலி யுகத்தின் தீய விளைவுகளிலிருந்து காப்பாற்றப்படுகிறார்கள். அவர்களது வாழ்க்கை ஒளிவிடத் தொடங்குகிறது, அவர்களது நடத்தை தூய்மையானதாகிறது. ஹரே கிருஷ்ண மஹா மந்திரத்தை ஜபம் செய்து வாழ்க்கையில் மாற்றமடைந்த ஆயிரக்கணக்கானோர் இதற்குச் சான்றாக உள்ளனர். நாம உச்சாடனம் என்னும் இந்த வழிமுறையை மேன்மேலும் அதிகமான மக்கள் ஏற்றுக்கொள்ளும்போது, உலகின் மொத்த நிலைமையும் மாறிவிடும். கலி யுகத்தில் 10,000 வருடங்கள் பொற்காலமாகத் திகழும் என சாஸ்திரங்கள் கணித்துள்ளன. ஹரே கிருஷ்ண இயக்கத்தின் மூலம் அந்த பொற்காலம் வந்து கொண்டுள்ளது. நரகம் போன்று விளங்கும் நமது பூமி, வைகுண்டமாக மாறிவிடும். பகவானுக்கு அன்பு செய்வதே வாழ்வின் உண்மையான குறிக்கோள் என்பதில் மக்கள் கவனம் செலுத்தும்போது அமைதியும் மகிழ்ச்சியும் இயற்கையாகவே எழுச்சிபெறும். நாசகரமான கலி யுகத்தின் விளைவுகளிலிருந்து விடுபட, புத்திசாலிகள், இந்த ஹரே கிருஷ்ண இயக்கத்தில் இணைந்து, தங்கள் வாழ்வை முன்னேற்றிக் கொண்டு மற்றவர்களுக்கும் உதவ வேண்டும்.

தவத்திரு. பக்தி விகாஸ ஸ்வாமி, இங்கிலாந்தில் பிறந்து கடந்த 35 வருடங்களாக இஸ்கானில் தொண்டு செய்து வருபவர். ஸ்ரீல பிரபுபாதரின் நேரடி சீடரும், மூத்த சந்நியாசியுமான இவர், பல்வேறு புத்தகங்களுக்கு ஆசிரியருமாவார்.

(தமிழாக்கம்: அமுதவல்லி தேவி தாஸி)

# கிருஷ்ணருக்குத் தொண்டு செய்யுங்கள், கிருஷ்ணரைப் பற்றி கனவு காணுங்கள், கிருஷ்ண லோகத்திற்குச் செல்லுங்கள்

இருபத்தி நான்கு மணி நேரமும் பங்குகொள்ளும் பக்தி யோகத்தைநாங்கள் இந்த கிருஷ்ண பக்தி இயக்கத்தில் கற்பிக்கிறோம். மேலோட்டமாகப் பார்த்தால், அதிகாலை 4 மணி முதல் இரவு 10 மணிக்கு ஓய்வெடுக்கும் வரை நாங்கள் இதில் ஈடுபடுகிறோம். ஒருவர் பக்தித் தொண்டில் முன்னேறியவராக இருந்தால், தூங்கும்போதும் அவர் கிருஷ்ணருக்கு சேவை செய்கிறார், 24 மணி நேரமும் சேவை செய்கிறார். தூங்கும் போது நீங்கள் கனவு காண்கிறீர்கள், பகல்பொழுதில் நாம் என்ன செய்கிறோமோ அதை இரவில் கனவு காண்கிறோம். முழுநேரமும் கிருஷ்ணருக்கு பக்தித் தொண்டு செய்பவர் இயற்கையாகவே இரவிலும் கிருஷ்ணரைக் கனவில் காணலாம். துணிகளை விற்பனை செய்யும் வியாபாரி ஒருவர் என்னுடைய நெருங்கிய உறவினர். அவர் துணிகளின் விலையைக் கனவிலும் கூறிக் கொண்டிருப்பார், அஃது இயற்கையே, செயற்கையானதல்ல. எனவே, ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண, ஹரே ஹரே/ ஹரே ராம, ஹரே ராம, ராம ராம ஹரே ஹரே, என நாம் பயிற்சி செய்ய வேண்டும். *யம் யம் வாபி ஸ்மரண் பாவம் த்யஜத்யந்தே கலேவரம்.* நாம் முறையாகப் பயிற்சி செய்தால், மரண நேரத்தில் கிருஷ்ணரின் ஞாபகம் வரும். அப்போது உடனடியாக நாம் கிருஷ்ண லோகத்திற்குச் செல்லலாம். இதில் எந்த சந்தேகமும் இல்லை. இஃது எளிமையான காரியம், ஆனால் பயிற்சி அவசியம்.

—தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர்,
நவம்பர் 11, 1976, விருந்தாவனம்





# புத்தாண்டு கொண்டாட்டம்

“சூரியனின் ஒவ்வொரு உதயமும் அஸ்தமனமும், உத்தம ஸ்லோகங்களால் வர்ணிக்கப்படும் முழுமுதற் கடவுளைப் பற்றி விவாதிப்பதில் தனது நேரத்தைச் செலவழிப்பவர்களைத் தவிர மற்ற அனைவரின் ஆயுளையும் குறைத்துவருகிறது.” (ஸ்ரீமத் பாகவதம் 2.3.17)

ஆங்கிலப் புத்தாண்டில் அடியெடுத்து வைத்திருக்கும் நாம் அனைவரும் மேற்கூறப்பட்டுள்ள கருத்தினைச் சற்று உற்று நோக்கலாம். புத்தாண்டு என்பது பொதுவாக மகிழ்ச்சியின் கொண்டாட்டமாக இருப்பினும், ஒவ்வொரு வருடப்பிறப்பும் நமது ஆயுளைக் குறைத்துக் கொண்டு வருவதை கவனித்தல் மிகவும் அவசியம். முழுமுதற் கடவுளான ஸ்ரீ கிருஷ்ணரின் புகழைப் பாடுவதில் நாம் நமது வருடத்தைக் கழித்தோமெனில், அது பயனுள்ளதாக அமையும்.

ஆன்மீக அன்பர்கள் அனைவருக்கும் புத்தாண்டில் எமது பணிவான வேண்டுகோள்: ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண, ஹரே ஹரே/ ஹரே ராம, ஹரே ராம, ராம ராம, ஹரே ஹரே என்னும் மஹா மந்திரத்தை தினமும் குறைந்தது 108 முறை உச்சரித்து பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் அருளிய பகவத் கீதையைப் படியுங்கள். உங்கள் வாழ்வு பக்குவமானதாக அமையும்.




**பக்தியில் யோகிகளான மஹாத்மாக்கள் என்னை அடைந்த பிறகு, முற்றிலும் துன்பம் நிறைந்த இந்த தற்காலிகமான உலகத்திற்குத் திரும்பி வருவதே இல்லை; ஏனெனில், அவர்கள் மிகவுயர்ந்த பக்குவத்தை அடைந்துவிட்டனர்.**

**—பகவத் கீதையில் (8.15) பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**










## கருத்து

சமூக சேவகர்கள் ஒரு மனிதனின் பௌதிகப் பிரச்சனைகளுக்கு (உணவு, உடை, மருத்துவம் போன்றவற்றிற்குத்) தீர்வு கொடுக்கலாம். ஆனால் உடலினுள் இருக்கும் உண்மையான நபருக்கு (ஆத்மாவிற்கு) அவர்களால் எந்த நன்மையும் அளிக்க முடியாது. அவர்களின் உதவி, சட்டையைக் (உடலைக்) காப்பாற்றி, மனிதனை (ஆத்மாவை) விட்டுவிடுவதைப் போன்றது. ஆன்மீகப் பாதையை மற்றவர்களுக்கு வழங்குவதே உண்மையான சமூக சேவை. ஆன்மீகத் தன்னுணர்விற்காக இந்த யுகத்தில் பரிந்துரைக்கப்படும் மிகவும் எளிமையான வழிமுறை என்னவெனில், ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண, ஹரே ஹரே/ ஹரே ராம, ஹரே ராம, ராம ராம, ஹரே ஹரே என்னும் மஹா மந்திரத்தை உச்சரிப்பதே.

## பிரிட்டிஷ் பிரதமரிடம் பகவத் கீதை உண்மையுருவில்



10, டவுனிங் தெரு: பிரிட்டிஷ் பிரதமரின் இல்லத்தில் நடந்த சமீபத்திய விழாவில், பிரதமர் திரு.டேவிட் கேமொரினை, இஸ்கானைச் சார்ந்த திரு.ஸ்ருதிதர்ம தாஸ் சந்தித்து ஸ்ரீல பிரபுபாதர் அருளிய பகவத் கீதையை வழங்கினார்.

கீதையை ஆர்வத்துடன் நோக்கிய பிரதமர், "பக்திவேதாந்த மேனர் கோவிலுக்கு நான் விஜயம் செய்துள்ளேன், அந்த அனுபவம் மிகவும் இனிமையானது. இப்புத்தகத்தை வழங்கியதற்கு மிக்க நன்றி. நான் இதனை கவனமாக வைத்துக் கொள்வேன்," என்று உரைத்தார்.

# பணிவினால் பக்குவம் பெற்ற பிரதாபருத்ரர்

## இடைவிடாத முயற்சியால் இறைவனின் கருணையைப் பெற்ற மாமன்னரின் கதை

*அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அருளிய ஸ்ரீ சைதன்ய சரிதாம்ருதத்தின் மொழிபெயர்ப்பு மற்றும் பொருளுரையிலிருந்து எடுக்கப்பட்டது.*

சுமார் ஐந்நூறு வருடங்களுக்கு முன்பு பிரதாபருத்ரர் என்னும் மன்னர் ஒரிசா மாகாணத்தை ஆண்டு வந்தார். அவர் பரம புருஷ பகவானான ஸ்ரீ கிருஷ்ணரின் சிறந்த பக்தர். ஜகந்நாத பூரியிலுள்ள ஸ்ரீ ஜகந்நாதரை அவர் வழிபட்டு வந்தார். பகவான் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு பூரியிலே வசிப்பதைக் கேள்விப்பட்டு, அவரை தரிசிப்பதற்கு ஆவல் கொண்டார். ஆனால் கிருஷ்ணருக்கான தூய பக்தித் தொண்டை பிரச்சாரம் செய்வதற்காகத் துறவறம் மேற்கொண்டிருந்த ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு, சந்நியாச வாழ்விற்கான அனைத்து விதிமுறைகளையும் தீவிரமாகப் பின்பற்றியதால், பௌதிக விஷயங்களில் ஈடுபட்டுள்ள மன்னர் பிரதாபருத்ரரைப் போன்றவர்களைச் சந்திப்பதை அவர் விரும்பவில்லை.

பகவான் சைதன்யர் பண்டிதரான சர்வபௌம பட்டாசாரியரின் இல்லத்தில் தங்கியிருப்பதை அறிந்த மன்னர், சர்வபௌமரைத் தனது அரண்மனைக்கு வரவழைத்து, "வங்காளத்திலிருந்து வந்துள்ள பரம புருஷர் உங்கள் இல்லத்திலே தங்கியிருப்பதைக் கேள்விப் பட்டேன். பரம தயாளனான அவரை நான் சந்திப்பதற்கு தயவுசெய்து ஏற்பாடு செய்து உதவுங்கள்," என்று வேண்டினார். "நீங்கள் கேள்விப்பட்டது உண்மையே. ஆனால் அவருடனான சந்திப்பை ஏற்பாடு செய்வது மிகவும் கடினமான ஒன்று. அவர் ஒரு சந்நியாசி என்பதால், உலகாயத விஷயங்களிலிருந்து விலகி வாழ்கிறார். கனவில்கூட ஓர் அரசருடனான சந்திப்பை அவர் விரும்பமாட்டார். இருப்பினும் நான் முயற்சி செய்கிறேன். ஆனால் இப்போது அவர் தென்னிந்தியாவிற்கு யாத்திரை சென்றுள்ளார்," என்று பட்டாசாரியர் பதிலளித்தார். இதைக் கேட்டதும், "ஏன் அவரைப் போக அனுமதித்தீர்கள்? அவர் காலிலே விழுந்து வணங்கி இங்கேயே இருக்குமாறு ஏன் சொல்லவில்லை?" என மன்னர் வினவினார்.

"பகவான் சைதன்யர் பரம புருஷ பகவானான ஸ்ரீ கிருஷ்ணர். அவர் சுதந்திரமானவர். இங்கேயே தங்க வைக்க முயன்றேன். இருப்பினும் என்னால் முடியவில்லை," என பட்டா சாரியர் பதிலளித்தார்.

"என்னைப் பொறுத்தவரையில் நீங்கள் படித்தவர், அனுபவம் நிறைந்தவர். நீங்களே ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவை கிருஷ்ணராக ஏற்பதால், நானும் அவரை அவ்வாறே ஏற்கிறேன். அவர் திரும்பி வந்ததும், என் கண்களின் பூரணத்துவத்திற்காக ஒரே ஒருமுறை அவரைப் பார்க்க விரும்புகிறேன்," என்று மன்னர் வேண்டினார்.

ஆறு வருடங்கள் கழித்து சைதன்ய மஹாபிரபு பூரிக்குத் திரும்பி வந்தபோது, சர்வபௌம பட்டாசாரியர் மஹாபிரபுவிடம், "மன்னர் பிரதாபருத்ரர் தங்களைக் காணப் பேராவலுடன் இருக்கிறார், நீங்கள் அவரைச் சந்திப்பீர்களா என கேட்கச் சொன்னார்," என்று தெரிவிக்க, சைதன்ய மஹாபிரபு உடனடியாக தனது கரங்களால் இரு காதுகளையும் மூடிக்கொண்டார்.

"எனதருமை பட்டாசாரியரே, ஏன் விரும்பத்தகாத வேண்டுகோளைக் கேட்கிறீர்கள்? நானோ துறவி, மன்னரைச் சந்திப்பது என்பது மங்கையைச் சந்திப்பதற்கு சமமான ஆபத்தை விளைவிக்கும். யாரொருவர் பகவானின் கருணையைப் பெற விரும்புகிறாரோ, அவர்கள் லௌகீகத்தில் மூழ்கியுள்ள வரையோ மங்கையரையோ சந்திப்பது என்பது கொடிய விஷத்தைவிட மிகவும் ஆபத்தானது."

பட்டாசாரியர் பதிலளித்தார்: "அன்பிற்குரிய பகவானே, நீங்கள் கூறுவது முற்றிலும் உண்மை. ஆனால் இவர் சாதாரணமான மன்னர் அல்ல. ஜகந்நாதரின் தூய பக்தரும் சிறந்த சேவகருமாவார்."

"அவர் எவ்வளவு பெரிய பக்தரானாலும், துறவியாகிய நான் கொடிய நாகத்திற்கு இணையாக அவரைக் கருத வேண்டும். நீங்கள் இவ்விஷயத்தைப் பற்றி மீண்டும் என்னிடம் பேசினால், என்னை உங்களால் இனிமேல் இங்கே பார்க்க இயலாது," என்று ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு மறுத்துவிட்டார். மீண்டும் மஹாபிரபுவை கோபப்படுத்தாமல் வீடு திரும்பிய பட்டாசாரியர் இவ்விஷயத்தைப் பற்றி யோசிக்கலானார்.

இதற்குள் பிரதாபருத்ர மன்னர் தனது தலைநகரான கட்டாக் நகரத்திற்குச் சென்றார். பகவானைச் சந்திக்க ஒப்புதல்

**தூய பக்தர்களின் கருணையால் பகவானின் பாதகமலங்களில் சரணடைய முடியும். மஹாபிரபு என்மீது கருணை காட்டாவிடில் நான் எனது அரச பதவியைத் துறந்து, ஆண்டியைப் போல வீடுவீடாகச் சென்று யாசகம் செய்வேன்.**

வேண்டி பட்டாசாரியருக்கு அவர் கடிதம் ஒன்றை அனுப்பினார். ''தயவுகூர்ந்து மஹாபிரபுவின் அடியார்களிடம் எனது வேண்டுகோளை எடுத்துக்கூறி மஹாபிரபுவிடம் யாசியுங்கள். தூய பக்தர்களின் கருணையால் பகவானின் பாதகமலங்களில் சரணடைய முடியும். மஹாபிரபு என்மீது கருணை காட்டாவிடில் நான் எனது அரச பதவியைத் துறந்து, ஆண்டியைப் போல வீடுவீடாகச் சென்று யாசகம் செய்வேன்.''

இக்கடிதத்தைப் படித்த சர்வபௌம பட்டாசாரியர் மிகவும் குழம்பிப் போனார். அங்கிருந்த பக்தர்களிடம் கடிதத்தைக் காண்பித்து அரசருடைய விருப்பத்தைத் தெரிவித்தார். பிரதாபருத்ரரின் ஆழ்ந்த பக்தியைக் கண்டு அனைவரும் ஆச்சரியத்தில் மூழ்கினர். ஆனால் மஹாபிரபு இதற்கு சம்மதிக்கமாட்டார் என்று ஒரு பக்தர் கருத்து தெரிவித்தார்.

''நாம் மீண்டும் ஒருமுறை மஹாபிரபுவை அணுகலாம், ஆனால் மன்னரைச் சந்திக்கும்படி வேண்டுகோள் விடுக்கத் தேவையில்லை. மன்னரின் நற்குணங்களைப் பற்றி மட்டும் பேசலாம்,'' என்ற பட்டாசாரியரின் ஆலோசனையை ஏற்று, பக்தர்கள் அனைவரும் மஹாபிரபு தங்கியிருந்த இடத்திற்குச் சென்றனர். ''நீங்கள் அனைவரும் இங்கு வந்திருப்பதன் காரணம் என்ன?'' என்று மஹாபிரபு வினவினார். அவர்கள் பேச நினைத்தபோதிலும், யாரிடமிருந்தும் ஒரு வார்த்தைகூட வெளியில் வரவில்லை. ''ஏதோ பேச வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள், ஆனால் பேச மறுக்கிறீர்கள். என்ன காரணம்?'' என்று மஹாபிரபு மீண்டும் கேள்வி எழுப்பினார்.

மஹாபிரபுவின் மிக நெருங்கிய தோழரான ஸ்ரீ நித்யானந்த பிரபு பதிலளித்தார்: ''நாங்கள் ஒரு விஷயத்தைப் பற்றிப் பேச விரும்புகிறோம். ஆனால் அதைப் பற்றிப் பேசுவதற்கு பயமாக உள்ளது. இருப்பினும், நாங்கள் கூறியே ஆக வேண்டும். தங்களின் தரிசனம் கிடைக்கவில்லையெனில் ஒரிசா மன்னர் தனது அரச பதவியைத் துறந்து ஆண்டியாகிவிடவும் முடிவு செய்துள்ளார். தான் விரும்பிய பொருள் கிடைக்கவில்லையெனில் தன் உயிரைத் துறப்பது பற்றுள்ள மனிதனின் இயல்பாகும்.''

மன்னரின் தீவிரமான பக்தியை அறிந்த பக்தர்கள் அவரை தற்கொலையிலிருந்து காப்பாற்ற முயற்சி செய்தனர். ''ஓர் உபாயம் உள்ளது. நீங்கள் அரசரை சந்திக்காமலேயே அவரை வாழ வைக்க முடியும். தயைகூர்ந்து தங்களது வஸ்திரம் ஒன்றை அவருக்கு அனுப்பி வையுங்கள். அதன்மூலம் தங்களை ஏதாவது ஒருநாள் காணலாம் என்ற எண்ணத்தில் அவர் உயிருடன் இருப்பார்,'' என்று நித்யானந்தர் ஆலோசனை கூறினார்.

பகவான் சைதன்யர் இதற்கு சம்மதம் தெரிவிக்க, நித்யானந்தர் பகவானின் வஸ்திரத்தை பட்டாசாரியரிடம் அளித்து அரசரிடம் சேர்க்கும்படி கூறினார். வஸ்திரம் பெற்ற மன்னர் பகவானை நேரடியாக வழிபடுவதுபோல அவரது ஆடையை வழிபடத் தொடங்கினார்.

மந்திரி மற்றும் பரிவாரங்களோடு கட்டாக் நகரத்திலிருந்து ஜகந்நாத பூரிக்கு மன்னர் வந்து சேர்ந்தார். அவருடன் அவரது ஆளுநர் இராமானந்த ராயரும் வந்திருந்தார். மஹாபிரபுவின் தென்னிந்திய யாத்திரையின்போது ஏற்கனவே அவரைச் சந்தித்த இராமானந்த ராயர் அவரது மிக நெருங்கிய நண்பராக இருந்தார். ஆளுநர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு தன்னுடன் ஜகந்நாத பூரியில் வந்து தங்குமாறு மஹாபிரபு இராமானந்த ராயரிடம் அழைப்பு விடுத்திருந்தார். பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் லீலைகளை தினமும் ஒன்றுகூடிப் பேசிப் பகிர்ந்துகொள்வதற்காக அழைத்திருந்தார். இராமானந்த ராயர் ஜகந்நாத பூரிக்கு வந்ததும் மிகுந்த ஆவலுடன் மஹாபிரபுவை சந்திக்கச் சென்றார். ஒருவரையொருவர் வரவேற்றபின், இராமானந்த ராயர் கூறினார்: ''பிரதாபருத்ர மகாராஜரிடம் (பதவியிலிருந்து விலகும்படியான) தங்களின் ஆணையைத் தெரிவித்தேன். 'என்னால் இனிமேல் அரசாங்க வேலையை தொடர இயலாது. மஹாபிரபுவின் தாமரைத் திருவடிகளில் இருக்க விரும்புகிறேன். அதற்கு உத்தரவு தாருங்கள்' என அவரிடம் கேட்டேன். தங்களின் திருநாமத்தைக் கேட்டதும் தனது அரியணையிலிருந்து எழுந்து வந்து என்னை அரவணைத்துக் கொண்டார். தங்களின் திருநாமத்தைக் கேட்டதும் ஆனந்தப் பரவச நிலையை அடைந்த அவர் முழு ஊதியத்தையும் ஓய்வூதியமாக அளிக்க சம்மதித்ததுடன், தங்களுக்கு முழு மனதுடன் சேவை செய்யுமாறு என்னை வேண்டிக் கொண்டார். பிறகு தாழ்மையுடன், 'நான் மிகவும் நீச்சமானவன். அதனால் மஹாபிரபுவை சந்திக்கும் தகுதியை நான் பெறவில்லை. ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு ஸ்வயம் ஸ்ரீ கிருஷ்ணரே. அவரது சேவை வாழ்வை வெற்றிகரமானதாக்கும். கருணாமூர்த்தியான அவர், இனிவரும் பிறவிகளில் அவரைச் சந்திக்கும்

வாய்ப்பினை எனக்கு அளிப்பார் என நம்புகிறேன்,' என்று கூறினார். பிரதாபருத்ர மன்னர் தங்கள்மீது கொண்டுள்ள அன்பில் ஒரு சிறு துளிகூட எனக்கு இருப்பதாகத் தோன்றவில்லை.''

''அன்பிற்குரிய இராமானந்த ராயரே, நீங்கள் கிருஷ்ண பக்தர்களில் முதன்மை யானவர். யாரொருவர் உங்களுக்கு சேவை செய்கிறார்களோ அவர்கள் கிருஷ்ணரின் அருளை நிச்சயம் பெறுவர். மன்னர் தங்கள்மீது வைத்துள்ள பக்திக்கு ஸ்ரீ கிருஷ்ணர் அவரைக் கண்டிப்பாக ஏற்றுக்கொள்வார்,'' என மஹாபிரபு பதிலளித்தார். அதன் பிறகு இராமானந்த ராயரும் மஹாபிரபுவும் கிருஷ்ணரைப் பற்றியும் அவரது லீலைகளைப் பற்றியும் தொடர்ந்து பேசி மகிழ்ந்தனர்.

அச்சமயத்தில் பட்டாசாரியருக்கு அழைப்பு விடுத்த மன்னர் பிரதாபருத்ரர், அவருக்கு உயரிய ஆசனத்தை அளித்து, ''பாவப்பட்ட தாழ்ந்த குலத்தில் பிறந்த எல்லா ஜீவன்களையும் விடுவிக்க மஹாபிரபு தோன்றியுள்ளார். ஆனால் பிரதாபருத்ரன் என்னும் பாவப்பட்ட மன்னனை மட்டும் விடுவிக்க மறுக்கின்றாரே. என்னைத் தவிர்ப்பதில் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு உறுதியாக இருக்கிறார் என்றால், என் உயிரை விட்டுவிடுவதில் நான் உறுதியாக உள்ளேன்,'' என வருத்தத்துடன் கூறினார்.

மன்னனின் இந்த உறுதியான முடிவு பட்டாசாரியருக்குஆச்சர்யத்தைஅளித்தது. லௌகீகத்தில் மூழ்கியுள்ளவர்கள் இவ்வளவு தீர்மானமாக இருப்பது இயலாத ஒன்று.

''அன்பிற்குரிய அரசரே, கவலை கொள்ளாதீர். தங்களது இந்த உறுதியான மனப்பான்மை ஸ்ரீ சைதன்ய மஹா பிரபுவின் கருணையைப் பெறுவதில் உதவியாக அமையும். தூய அன்பினால் மட்டுமே இறைவனை அடைய முடியும். ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவின் மீதான தங்களது அன்பு சந்தேகமின்றி ஆழமானது என்பதால், அவர் தங்களுக்கு நிச்சயம் கருணை காட்டுவார்,'' என்று பட்டாசாரியர் ஆறுதல் கூறினார்.

பட்டாசாரியர் அரசருக்காக மிகவும் இரக்கப்பட்டார், தன்னால் முடிந்த அளவு உதவி செய்ய விரும்பினார். மஹாபிரபுவின் கருணையைப் பெற பின்வரும் ஆலோசனையை அரசருக்கு வழங்கி ஆசி புரிந்தார்: ''மஹாபிரபுவை நேரடியாகச் சந்திக்க ஒரே ஒரு வழி உண்டு. ரதயாத்திரை உற்சவத்தின்போது, மஹாபிரபு பாடி ஆடுவார். களைப்படையும்போது அருகிலுள்ள தோட்டத்திற்குச் செல்வார். அச்சமயத்தில் நீங்கள் தனியாக சாதாரண உடை உடுத்தி அங்கு சென்றால், மஹாபிரபுவிற்குத் தொண்டு செய்ய இயலும். கவலைப்படாதீர்கள்.'' இவ்வாறு அரசரை உற்சாகப்படுத்திவிட்டு வீடு திரும்பினார் பட்டாசாரியர்.

அதன் பின்னர், இராமானந்த ராயர் மன்னரின் ஆர்வத்தை மஹா பிரபுவிடம் நினைவுபடுத்திக் கொண்டிருந் தார். தனது நயமான பேச்சினால் மஹாபிரபுவின் மனதை மாற்றினார் இராமானந்த ராயர், ''நீங்கள் முழுமுதற் கடவுள். யாருக்காகவும் பயப்படத் தேவையில்லை.'' மஹாபிரபு அதனை மறுத்தார், ''நான் முழுமுதற் கடவுள் அல்ல. சாதாரண மனிதன். அதனால் மக்களின் பேச்சிற்கு நான் பயப்படுகிறேன். பொதுமக்கள், சந்நியாசியின் நடத்தையில் சிறிய குற்றத்தை கண்டுபிடித்தாலும், அதை காட்டுத் தீ போல பெரிதாக்கிவிடுவர். வெள்ளைத் துணியில் உள்ள கரும்புள்ளியை மறைக்க முடியாது, அது நன்றாகத் தெரியும்.'' (உண்மையில் ஸ்ரீ சைதன்யர் சாக்ஷாத் முழுமுதற் கடவுள் ஸ்ரீ கிருஷ்ணரே, இருப்பினும், பக்தராக வாழ்ந்து காட்டிய அவர், லௌகீகத்தில் உள்ள மன்னரின் தொடர்பு ஒரு சந்நியாசிக்கு அழகல்ல என்றும், மக்களின் விமர்சனம் தனது பிரச்சாரத்திற்குத் தடையை உண்டாக்கும் என்றும் எண்ணினார்)

''அன்பிற்குரிய மஹாபிரபுவே, பல்வேறு பாவப்பட்ட மக்களை நீங்கள் கடைத்தேற்றி இருக்கிறீர்கள். மன்னன் பிரதாபருத்ரன் உண்மையில் தங்களது சேவகரும் சிறந்த பக்தருமாவார்.''

''பானை முழுக்க பால் இருக்கலாம். ஆனால் அதில் ஒரு துளி மது கலந்தால், தீண்டத்தகாததாகிவிடும். மன்னரிடம் நிறைய நற்குணங்கள் உள்ளன, ஆனால் 'மன்னர்' என்ற அவரது பட்டம் அவையனைத்தையும் நாசமாக்கிவிடுகின்றது. இருந்தாலும், நான் அவரைச் சந்திக்க வேண்டும் என நீங்கள் விரும்பினால், முதலில் அவரது மகனை அழைத்து வாருங்கள். மகன் தந்தையின் பிரதிநிதி என வேதம் உரைக்கிறது. மன்னரின் மகனைச் சந்திப்பது மன்னரைச் சந்திப்பதற்கு சமமானதாகும்.''


இவ்வுரையாடலை அரசரிடம் தெரிவித்த இராமானந்த ராயர், மஹாபிரபுவின் ஆணைக்கிணங்கி இளவரசரை அவரிடம் அழைத்து வந்தார். இளவரசரின் கருநீலத் திருமேனி, பரந்த தாமரைக் கண்கள், மஞ்சள் நிற பட்டாடை, ஆபரணங்கள் ஆகியவை

**பானை முழுக்க பால் இருக்கலாம். ஆனால் அதில் ஒரு துளி மது கலந்தால், தீண்டத்தகாததாகிவிடும். மன்னரிடம் நிறைய நற்குணங்கள் உள்ளன, ஆனால் 'மன்னர்' என்ற அவரது பட்டம் அவையனைத்தையும் நாசமாக்கிவிடுகின்றது.**

ஸ்ரீ கிருஷ்ணரை அனைவருக்கும் நினைவுபடுத்தின.

இளவரசரைப் பார்த்த மஹாபிரபு, ''இவர் சிறந்த பக்தர். இவரைப் பார்ப்பவர் அனைவரும் ஸ்ரீ கிருஷ்ணரை நினைக்கிறார்கள். இச்சிறுவனை அனுப்பியதன் மூலம் அரசருக்கு நான் கடன்பட்டவனானேன்,'' என்று புகழ்ந்த வண்ணம் இளவரசரை அரவணைத்தார். அங்கு கூடியிருந்த பக்தர்கள் அனைவரும் அச்சிறுவனின் பாக்கியத்தைப் புகழ்ந்தனர். பிறகு இராமானந்தர் இளவரசனை அரண்மனையில் விட்டுவந்தார். இளவரசனின் அனுபவத்தைக் கேட்ட அரசர் மகிழ்ச்சியுடன் அவனைத் தழுவினார், பரவச நிலையை அடைந்தார்— மஹாபிரபுவை தழுவிக் கொண்டதுபோல உணர்ந்தார்.

வருடந்தோறும் கொண்டாடப்படும் பகவான் ஜகந்நாதரின் ரதயாத்திரை உற்சவம் வந்தது. பகவான் ஜகந்நாதர் மேளதாள வாத்திய முழக்கங்களுடன் ரதத்தில் எழுந்தருளியதை சைதன்ய மஹாபிரபுவும் ஆயிரக்கணக்கான மக்களும் கண்டுகளித்தனர்.



மன்னர் பிரதாபருத்ரர் ரதத்திற்கு முன்பு வந்து தன் கைப்பட ரதவீதியைக் கூட்டி சுத்தம் செய்து, சந்தனம் கலந்த நீர் தெளித்து ஜகந்நாதருக்கு சேவை செய்தார். மன்னரின் பணிவான சேவையைக் கண்ட மஹாபிரபு அகமகிழ்ந்தார்.

மன்னர் பிரதாபருத்ரர் ரதத்திற்கு முன்பு வந்து தன் கைப்பட ரதவீதியைக் கூட்டி சுத்தம் செய்து, சந்தனம் கலந்த நீர் தெளித்து ஜகந்நாதருக்கு சேவை செய்தார். மன்னரின் பணிவான சேவையைக் கண்ட மஹாபிரபு அகமகிழ்ந்தார்.

மிகப்பெரிய ரதங்கள் குண்டிசா கோவிலை நோக்கி சாலையில் நகர்ந்தன. பக்தர்கள் உற்சாகத்துடன் 'ஹரே கிருஷ்ண' கீர்த்தனத்தைப் பாடி ஆடினர். பக்தர்களை ஏழு குழுக்களாகப் பிரித்த சைதன்ய மஹாபிரபு ஒவ்வொரு குழுவிற்கும் இரண்டு மிருதங்கங்களை அளித்தார். பகவானின் திவ்ய நாமத்தை அனைவரும் ஒன்றுகூடிப் பாடும் இந்த சங்கீர்த்தன முறையைப் பார்த்த மன்னர் ஆச்சரியமடைந்தார். கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிய அனைத்து பக்தர்களும் பகவானின் திவ்ய நாமங்களை பாடிப் பரவசமடைந்தனர். மஹாபிரபு, ''ஹரி! ஹரி!'' என்று பாடிக் கொண்டு, தனது இரு கைகளையும் உயர்த்தியபடி, ''எல்லாப் புகழும் ஜகந்நாதருக்கே'' என்று உரக்கக் கூறினார். ஏழு இடங்களிலும் தன்னை விரிவுபடுத்தியிருந்த மஹாபிரபு அவ்வெல்லா இடங்களிலும் நடனமாடினார்; இருப்பினும் மக்கள் அவரை ஏதாவது ஓர் இடத்தில் மட்டுமே கண்டனர். ஆனால் ஏழு குழுக்களிலும் மஹாபிரவுவைக் கண்ட மன்னரால் தன் கண்களை நம்பவே முடியவில்லை, அதிசயத்தில் மலைத்துப் போனார். அரசரைக் காண்பதற்கு மறுப்புத் தெரிவித்த மஹாபிரபு, தற்போது தனது சக்திகளை அவருக்குக் காண்பித்து தன் அன்பை வெளிப்படுத்தினார்.

அனைவரும் ஆடிப் பாடி ஆனந்தத்தில் திளைத்தனர், அவர்களின் திவ்ய ஒலி நாற்புறமும் எதிரொலித்தது.

ஜகந்நாதரின் ரதம் குண்டிசா தோட்டத்தை அடைந்ததும் அங்கு நிறுத்தப்பட்டு, பக்தர்களால் செய்யப்பட்ட உணவுகள் அனைத்தும் நைவேத்தியம் செய்யப்பட்டன. தன் மனைவியுடன் வந்திருந்த மன்னர், மந்திரிகள் மற்றும் இதர மக்களும் உணவுகளை நைவேத்தியம் செய்தனர். பெருந் திரளான மக்கள் அங்கு கூடியிருந்தனர்.






# ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்

65 ஆண்டு கால பாரம்பரியமிக்க
Back to Godhead
பத்திரிகையின் தமிழ் பதிப்பு, தற்போது
**உங்கள் இல்லம் தேடி!**

ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் மாதந்தோறும் உங்கள் இல்லம் தேடி வர, சந்தாதாரராக மாறுங்கள்.

ஒரு வருட சந்தா: ரூ.160
இரு வருட சந்தா: ரூ.300
ஐந்து வருட சந்தா: ரூ.700

**நீங்களும் சந்தாதாரராக மாற...**

தங்களுக்கு அருகில் இருக்கும் இஸ்கான் கோவிலை உடனடியாக அணுகுங்கள். தங்களது இருப்பிடத்திற்கு அருகில் இஸ்கான் கோவில் இல்லையெனில், சந்தாவிற்குரிய தொகையை வரைவோலை (Demand Draft [DD]) மூலமாக "Bhaktivedanta Book Trust" என்னும் பெயரில், தங்களது முழு முகவரி மற்றும் தொலைபேசி எண்ணுடன் அனுப்பி வைக்கவும். At par காசோலைகள் (cheque) ஏற்கப்படும், ஆனால் வெளியூர் காசோலைகள் ஏற்கப்பட மாட்டாது.

அனுப்ப வேண்டிய முகவரி: ஸ்ரீ கிருஷ்ண தரிசனம், 7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. தொலைபேசி: (044) 25514553, 98948 14553

ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் படியுங்கள்! ஸ்ரீ கிருஷ்ணரின் தரிசனத்தை அடையுங்கள்!




**ஜனவரி**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | 31 | 3 | 10 | 17 | 24 |
| செ | | 4 | 11 | 18 | 25 |
| பு | | 5 | 12 | 19 | 26 |
| வி | | 6 | 13 | 20 | 27 |
| வெ | | 7 | 14 | 21 | 28 |
| ச | 1 | 8 | 15 | 22 | 29 |
| ஞா | 2 | 9 | 16 | 23 | 30 |

**பிப்ரவரி**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | | 7 | 14 | 21 | 28 |
| செ | 1 | 8 | 15 | 22 | |
| பு | 2 | 9 | 16 | 23 | |
| வி | 3 | 10 | 17 | 24 | |
| வெ | 4 | 11 | 18 | 25 | |
| ச | 5 | 12 | 19 | 26 | |
| ஞா | 6 | 13 | 20 | 27 | |

**மார்ச்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | | 7 | 14 | 21 | 28 |
| செ | 1 | 8 | 15 | 22 | 29 |
| பு | 2 | 9 | 16 | 23 | 30 |
| வி | 3 | 10 | 17 | 24 | 31 |
| வெ | 4 | 11 | 18 | 25 | |
| ச | 5 | 12 | 19 | 26 | |
| ஞா | 6 | 13 | 20 | 27 | |

**ஏப்ரல்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | | 4 | 11 | 18 | 25 |
| செ | | 5 | 12 | 19 | 26 |
| பு | | 6 | 13 | 20 | 27 |
| வி | | 7 | 14 | 21 | 28 |
| வெ | 1 | 8 | 15 | 22 | 29 |
| ச | 2 | 9 | 16 | 23 | 30 |
| ஞா | 3 | 10 | 17 | 24 | |

**மே**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | 30 | 2 | 9 | 16 | 23 |
| செ | 31 | 3 | 10 | 17 | 24 |
| பு | | 4 | 11 | 18 | 25 |
| வி | | 5 | 12 | 19 | 26 |
| வெ | | 6 | 13 | 20 | 27 |
| ச | | 7 | 14 | 21 | 28 |
| ஞா | 1 | 8 | 15 | 22 | 29 |

**ஜூன்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | | 6 | 13 | 20 | 27 |
| செ | | 7 | 14 | 21 | 28 |
| பு | 1 | 8 | 15 | 22 | 29 |
| வி | 2 | 9 | 16 | 23 | 30 |
| வெ | 3 | 10 | 17 | 24 | |
| ச | 4 | 11 | 18 | 25 | |
| ஞா | 5 | 12 | 19 | 26 | |

**ஜூலை**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | | 4 | 11 | 18 | 25 |
| செ | | 5 | 12 | 19 | 26 |
| பு | | 6 | 13 | 20 | 27 |
| வி | | 7 | 14 | 21 | 28 |
| வெ | 1 | 8 | 15 | 22 | 29 |
| ச | 2 | 9 | 16 | 23 | 30 |
| ஞா | 3 | 10 | 17 | 24 | 31 |

**ஆகஸ்ட்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | 1 | 8 | 15 | 22 | 29 |
| செ | 2 | 9 | 16 | 23 | 30 |
| பு | 3 | 10 | 17 | 24 | 31 |
| வி | 4 | 11 | 18 | 25 | |
| வெ | 5 | 12 | 19 | 26 | |
| ச | 6 | 13 | 20 | 27 | |
| ஞா | 7 | 14 | 21 | 28 | |

**செப்டம்பர்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | | 5 | 12 | 19 | 26 |
| செ | | 6 | 13 | 20 | 27 |
| பு | | 7 | 14 | 21 | 28 |
| வி | 1 | 8 | 15 | 22 | 29 |
| வெ | 2 | 9 | 16 | 23 | 30 |
| ச | 3 | 10 | 17 | 24 | |
| ஞா | 4 | 11 | 18 | 25 | |

**அக்டோபர்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | 31 | 3 | 10 | 17 | 24 |
| செ | | 4 | 11 | 18 | 25 |
| பு | | 5 | 12 | 19 | 26 |
| வி | | 6 | 13 | 20 | 27 |
| வெ | | 7 | 14 | 21 | 28 |
| ச | 1 | 8 | 15 | 22 | 29 |
| ஞா | 2 | 9 | 16 | 23 | 30 |

**நவம்பர்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | | 7 | 14 | 21 | 28 |
| செ | 1 | 8 | 15 | 22 | 29 |
| பு | 2 | 9 | 16 | 23 | 30 |
| வி | 3 | 10 | 17 | 24 | |
| வெ | 4 | 11 | 18 | 25 | |
| ச | 5 | 12 | 19 | 26 | |
| ஞா | 6 | 13 | 20 | 27 | |

**டிசம்பர்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | | 5 | 12 | 19 | 26 |
| செ | | 6 | 13 | 20 | 27 |
| பு | | 7 | 14 | 21 | 28 |
| வி | 1 | 8 | 15 | 22 | 29 |
| வெ | 2 | 9 | 16 | 23 | 30 |
| ச | 3 | 10 | 17 | 24 | 31 |
| ஞா | 4 | 11 | 18 | 25 | |

- ஜனவரி 14, பொங்கல்
- மார்ச் 19, கௌர பூர்ணிமா
- ஏப்ரல் 12, இராம நவமி
- மே 16, நரசிம்ம சதுர்தசி
- ஆகஸ்ட் 13, பலராம பூர்ணிமா
- ஆகஸ்ட் 22, கிருஷ்ண ஜென்மாஷ்டமி
- செப்டம்பர் 5, ராதாஷ்டமி
- அக்டோபர் 26, தீபாவளி
- அக்டோபர் 27, கோவர்தன பூஜை

ஏகாதசி திருநாள்

# ஸ்ரீ ஜகந்நாதர் ரதயாத்திரை




## ஊர் கூடி தேரிழுப்போம், வாரீர்!

### சென்னை: 14 ஜனவரி, 2011

மாலை 03:00 மணி

மைலாப்பூர் கபாலீஸ்வரர் கோவில் - ராமகிருஷ்ண மடம் தெரு - டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை - கதீட்ரல் சாலை - நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை - விலேஜ் சாலை - மெக்நிகல்ஸ் சாலை - குசலாம்பாள் கல்யாண மஹால். சேத்துபட்டு

### கோவை: 8 ஜனவரி, 2011

மதியம் 02:30 மணி

தேர்முட்டி - ராஜா தெரு - ஒப்பணக்கார வீதி - வைத்தியாள் தெரு - கருப்ப கவுண்டர் தெரு - தேர் முட்டி




K.V. Narayanan

99400 47587

K.V.N. REALTY

Buying ௸ Selling ௸ Rental

Old #26, New #42, Devaraja Mudali Street,

2nd Floor, Park Town, Chennai - 600 003.


அச்சமயத்தில் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு தன் நடனத்தை நிறுத்திவிட்டு ஓய்வெடுப்பதற்காகத் தோட்டத்திற்குச் சென்றார். அவருடைய உடல் முழுவதும் வியர்த்திருந்ததால் தோட்டத்தின் குளுமையான காற்று அவருக்கு இதமாயிருந்தது. இதர பக்தர்களும் தங்களது நடனத்தை நிறுத்திவிட்டு தோட்டத்திற்குள் சென்று மரங்களின் நிழலில் இளைப்பாறினர்.

மஹாபிரபு ஓய்வெடுத்துக் கொண்டிருந்த சமயத்தில், பிரதாபருத்ரர் தோட்டத்திற்குள் சென்றார். பட்டாசாரியரின் அறிவுரையை ஏற்று, தன் அரச உடைக்குப் பதிலாக எளிய வைஷ்ணவ உடையை அணிந்து வந்தார். பணிவுடன் அங்கிருந்த மற்ற பக்தர்களுக்குத் தன் வணக்கங்களை தெரிவித்த பின்னர், தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, மஹாபிரபுவின் பாதகமலங்களைத் தொட்டுத் தன் வணக்கத்தை தெரிவித்தார். மஹாபிரபுவின் கால்களைப் பிடித்துவிட்ட வண்ணம், ஸ்ரீமத் பாகவதத்திலிருந்து கோபிகா கீதப் பாடல்களைப் பாடத் தொடங்கினார். அவற்றைக் கேட்டதும் மஹாபிரபுவின் ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை, தொடர்ந்து பாடுமாறு வேண்டினார். *தவ கதாம்ருதம்* என்று தொடங்கும் பாடலைக் கேட்டவுடன், உயர்ந்த பரவசத்தில் எழுந்த மஹாபிரபு மன்னரைத் தழுவிக் கொண்டார்.

அப்பாடலின் பொருள்: ‘‘உமது (கிருஷ்ணரது) அமுத மொழிகளும் லீலைகளும் பௌதிக உலகில் துன்பப்படும் ஜீவன்களின் ஜீவனமாகும். உன்னத பக்தர்களால் பரப்பப்படும் இந்த லீலைகள், எல்லா பாவங்களையும் போக்குவதோடு கேட்பவர்களுக்கு நல்லதிர்ஷ்டத்தையும் அளிக்கின்றன. தெய்வீக சக்தியால் நிரம்பியுள்ள இந்த வர்ணனைகள் உலகெங்கிலும் பரப்பப்படுகின்றன. அவ்வாறு உமது செய்திகளைப் பரப்புபவர்களே உண்மையான சமூக சேவகர்கள்.’’ (ஸ்ரீமத் பாகவதம் 10.31.9)

‘‘நீங்கள் பரம தயாளன்! பரம தயாளன்!’’ பக்திப் பரவசத்துடன் அரசரை அரவணைத்துக் கொண்ட மஹாபிரபு, ‘‘நீங்கள் எனக்கு விலையுயர்ந்த வைரத்தை அளித்தீர்கள். ஆனால் என்னிடத்தில் உங்களுக்குத் தருவதற்கு ஒன்றுமில்லை,’’ என்று கூறிக் கொண்டே மீண்டும் அப்பாடலைப் பாடினார். இருவருக்கும் உணர்ச்சிப் பெருக்கில் ஆனந்தக் கண்ணீர் வழிந்தோடியது. சற்று நேரம் கழித்து, ‘‘திடீரென்று இங்கு வந்து ஸ்ரீ கிருஷ்ணரின் லீலாம்ருதத்தைப் பருகச் செய்த தாங்கள் யார்?’’ என மஹாபிரபு வினவினார்.

‘‘தாங்களின் சேவகனின் சேவகன் நான்; தாங்கள் என்னை அவ்வாறு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதே எனது விருப்பம்,’’ என்று மன்னர் தன்னை அறிமுகப்படுத்தினார். பின்னர், மஹாபிரபு



பட்டாசாரியரின் அறிவுரையை ஏற்று, தன் அரச உடைக்குப் பதிலாக எளிய வைஷ்ணவ உடையை அணிந்து வந்த மன்னர் பிரதாபருத்ரர், தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, மஹாபிரபுவின் பாதகமலங்களைப் பிடித்துவிட்ட வண்ணம், ஸ்ரீமத் பாகவதத்திலிருந்து கோபிகா கீதப் பாடல்களைப் பாடத் தொடங்கினார்.

தனது திவ்யமான ஐஸ்வர்யங்களை அவருக்கு வெளிப்படுத்தினார். அவர் யார் என அறிந்திருந்தும், அறியாததுபோல மஹாபிரபு காட்டிக் கொண்டார்.

மஹாபிரபுவின் தனிப்பட்ட கருணையை அடைந்த மன்னரின் நல்லதிர்ஷ்டத்தைப் பக்தர்கள் புகழ்ந்து மகிழ்ந்தனர். பணிவுடன் தன் வணக்கங்களை பக்தர்களுக்கும் மஹாபிரபுவுக்கும் தெரிவித்த பின்னர், தோட்டத்தை விட்டு மன்னர் கிளம்பினார்.

இவ்விதமாக, மன்னர் பிரதாபருத்ரர் பகவான் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவின் கருணையைப் பெற்றார். மன்னர் என்ற காரணத்தினால் கருணையைப் பெறத் தவறிய பிரதாபருத்ரர், ஜகந்நாதரின் முன்பு சாதாரண வேலைக்காரனைப் போல செய்த பணிவான சேவைகளின் மூலம் அவரின் கருணையை முற்றிலுமாகப் பெற்றார். ஜகந்நாதருக்குத் தொடர்ந்து இடைவிடாமல் தொண்டு செய்துவந்த மன்னர், செல்வமும், பலமும் நிரம்பியிருந்தபோதிலும் தன்னடக்கத்துடன் வாழ்ந்து வந்தார்.

இன்றுவரை, மன்னர் பிரதாபருத்ரரின் வம்சத்தினர் அவரது முன்னுதாரணத்தைப் பின்பற்றுகின்றனர். தற்போதும்கூட வருடந்தோறும் நடைபெறும் ஜகந்நாதரின் ரதயாத்திரையில் கலந்து கொள்ளும் பூரி மன்னர், துடைப்பத்தைக் கொண்டு ரதத்திற்கு முன்பாக பாதையை சுத்தம் செய்வது குறிப்பிடத்தக்கதாகும்.

(தமிழாக்கம்: அமுதவல்லி தேவி தாஸி)

---

வாசகர் கடிதம்

# புராண காலத்தில் மின்சார வேலியா?

நவம்பர் 2010 இதழில் *நரகாசுர வதம்* என்ற தலைப்பின்கீழ் அமைந்த கட்டுரையில் இரண்டாவது பத்தியின் கீழ் "நகரத்தைச் சுற்றிலும் மின்சாரம் பாய்ந்த கம்பிகள் இடப்பட்டிருந்தன என்றும் மூன்றாவது பத்தியில் மின்சார வேலிகளைச் செயலற்றுப் போகச் செய்தார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள இந்த வரிகளில் அடியேனுக்கு சில சந்தேகங்கள் ஏற்படுகிறது. புராண காலத்தைக் கேள்வி கேட்பது என்பது அடியேனின் நோக்கமல்ல. கிருஷ்ண யுகத்தில் நவீன அறிவியலின் கண்டுபிடிப்பான மின்சாரம் இருந்தது என்பதற்கான குறிப்புகள் இருந்தனவா என்று தெரிய வேண்டும்.

மேலும் வாதத்திற்கு ஆன்மீகமும் அறிவியலும் இணைந்து பார்க்க வேண்டிய நிலை என்று வைத்துக் கொண்டாலும் மின்சார சக்தி நீரிலிருந்தும் நிலக்கரியிலிருந்தும் தயாரிக்கும் அறிவியல் முறை நவீன உலகில் சாத்தியமாகியிருக்கிறது. புராண கால உலகில் மின்சாரம் இருந்துள்ளதா என்று தெரிய வேண்டும்.

நரகாசுரனின் காலத்தில் மின்சார வேலி போடப்பட்டிருந்தது என்ற குறிப்பு உறுத்தலாக இருக்கிறது. இதற்கு சரியான பதில் வேண்டி காத்திருக்கிறேன். நன்றி.

—G.விஸ்வநாதன், சென்னை

## எமது பதில்

புராண விஷயங்களைத் தெளிவாக அறிந்துகொள்வதில் தங்களுக்கு இருக்கும் ஆர்வத்திற்கு நன்றி.

தற்போதைய காலத்தைக் காட்டிலும் புராண கால மக்களிடையே இருந்த வசதிகள் எண்ணற்றவை. அச்சமயங்களில் மக்கள் ஏழ்மையில் வாழ்ந்ததாக நமது பாடப் புத்தகங்களில் கற்றுத் தரப்படுகிறது. ஆனால் அஃது உண்மை யல்ல. பண்டைய கால மக்கள் மிகுந்த செல்வச் செழிப்புடனும் வசதியுடனும் வாழ்ந்தனர் என்பதை நாம் புராணங்களிலிருந்து அறிகிறோம். நவீன கால மக்கள் பொதுவாக இதனை அறிவதில்லை. புராணங்களைத் தாங்கள் சந்தேகிக்கவில்லை என்பதால் அதுபற்றிய அதிக விளக்கம் இங்கு அவசியமில்லை.

நரகாசுர வதத்தில் கூறப்பட்டுள்ள "மின்சார வேலிகள்," தற்போதைய மின்சார வேலிகளிலிருந்து நிச்சயம் வேறுபட்டவை. இருப்பினும், அவை இன்றைய மின்சார வேலிகளின் தன்மையை ஒத்திருப்பதால், "மின்சார வேலிகள்" என்னும் சொல் உபயோகிக்கப்பட்டது. வேத காலத்தில் உபயோகிக்கப்பட்ட பல்வேறு பொருள்கள் நவீன காலத்தில் கிடைப்பதில்லை; எனவே, அவற்றைப் பற்றி எழுதும்போது நவீன மக்களுக்குப் புரியக்கூடிய வகையில் எழுதுதல் வழக்கம். ஸ்ரீமத் பாகவதத்தில் *முர-பாஸ* என்னும் சொல் அந்த வேலிகளைக் குறிப்பதற்காகக் கொடுக்கப்பட்டுள்ளது. அது தற்போதைய மின்சார வேலியை ஒத்தது என்று ஆச்சாரியர்கள் கூறுகின்றனர். புராண காலத்தில், அசுரர்களிடையே அதிகமான வசதிகள் (குறிப்பாக அழிவிற்குரிய வசதிகள்) இருந்ததை நாம் பல இடங்களில் காண்கிறோம். முராசுரனால் இடப்பட்ட அந்த வேலிகள் உண்மையில் இன்றைய மின்சார வேலிகளைக் காட்டிலும் நிச்சயம் பலமடங்கு அதிக சக்தியுடையவை.

இயற்கையின் சக்திகள் வேத காலத்தில் பல்வேறு முறைகளில் உபயோகிக்கப்பட்டன. உதாரணமாக, இந்திரனின் ஆயுதம் *வஜ்ராயுதம்* என்று அழைக்கப்படுகிறது. *வஜ்ர* என்றால் மின்னல் என்று பொருள்; மின்னலில் உள்ள மின்சார சக்தி அளவிடற்கரியது என்பதை நவீன விஞ்ஞானிகளும் ஒப்புக் கொள்கின்றனர்.

மேலும், மின்சார வேலிகளை இடுவதற்கு நீர் அல்லது நிலக்கரியிலிருந்து தயாரிக்கப்படும் மின்சாரம் தேவை என்று எழுதியுள்ளீர்கள்; ஆனால் அஃது உண்மையல்ல. நவீன உலகின் பெட்ரோல் இல்லாமலேயே புராண காலத்தில் விமானங்கள் இயக்கப்பட்டன. அதுபோல, நவீன கால மின்சாரம் இல்லாமலேயே புராண காலத்தில் மின்சார வேலிகள் இடப்பட்டிருந்ததை முராசுரனின் பாதுகாப்பு அமைப்பிலிருந்து நாம் அறிகிறோம்.

# பிரபுபாதர் நூற்றந்தாதி

பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் திருநாமத்தினை உலகெங்கிலும் பரப்பி ஆன்மீக உலகில் புரட்சியை ஏற்படுத்திய ஸ்ரீல பிரபுபாதரைப் புகழ்ந்து, அவரது வாழ்க்கை வரலாற்றை விளக்கும் வண்ணம் எழுதப்பட்டதே இந்த "பிரபுபாதர் நூற்றந்தாதி". எளிய தமிழில் இயற்றப்பட்டுள்ள இந்த குற்றமற்ற வெண்பாக்கள் வானில் மிதந்து மேவிவரும் பொருட்டு இங்கு இதனை தொடர்ந்து பிரசுரித்துக் கொண்டுள்ளோம். முதல் செய்யுளின் இறுதியை அடுத்த செய்யுளின் ஆரம்பமாகக் கொண்டு அழகிய அந்தாதியின் வடிவிலுள்ள இந்த 108 வெண்பாக்கள் மக்களின் கருவில் புகுந்து மாபெரும் பக்தரான ஸ்ரீல பிரபுபாதரின் பொன் கருத்துக்கள் அவர்களின் நெஞ்சங்களில் நிற்பதற்கான தகுந்த இடத்தை ஏற்படுத்துவது உறுதி.

**வழங்கியவர்: தயாள் கோவிந்த தாஸ்**

## பகுதி 5

**வனமாலி மாயனின் வண்புகழ் நெஞ்சிற்**
**தினமோங்கச் செய்தருளும் தீரர்– இனம்தோற்றிக்**
**கோபற் குமரனின் கோபியிளம் சிங்கத்தின்**
**ஞாபகம் தந்தார் நமக்கு. (49)**

வனமாலி (காட்டு மலர்களை அணிந்த) கிருஷ்ணரின் உயர்ந்த புகழ் நமது நெஞ்சில் தினமும் ஓங்கச் செய்து அருள்புரியும் தீரர். கிருஷ்ண பக்தி இனத்தைத் தோற்றுவித்து, நந்தகோபனின் குமரனும் யசோதையின் இளம் சிங்கக் குட்டியுமாகிய கிருஷ்ணரின் ஞாபகத்தை பிரபுபாதர் நமக்குத் தந்தருள்கின்றார்.



வனமாலி கிருஷ்ணரின் புகழை உலகத்தார் நெஞ்சில் நிற்கச் செய்தவர் ஸ்ரீல பிரபுபாதர்

**நமக்கினியார் மூன்றூரில் நற்பெரும்கோ யிற்கட்**
**தமக்கினியார் தம்தொண்டாற் தந்தார்– நமக்கினியார்**
**சாதனைகட் சொல்லும் சரித்திரம் யாமறிவோம்,**
**மாதவனுக் காய்ச்செய்தார் மாண்டு. (50)**

நமக்கு இனியவரான பிரபுபாதர், மும்பை, விருந்தாவனம், மாயாப்பூர் ஆகிய மூன்று ஊர்களில், தமக்கு இனியவர்களான தொண்டர்களின் உதவியுடன் பெரும் கோயில்களைக் கட்டித் தந்தார். நமக்கு இனியவரான பிரபுபாதரின் சாதனைகளைச் சொல்லும் சரித்திரத்தை யாம் அறிவோம். எல்லாவற்றையும் சிறப்பாக மாதவனுக்காகவே செய்தார்.

**மாண்டபெரும் கோயிலில் மாயன் மதன்மோகன்**
**வேண்டு மவன்உணர் வேற்றிடுவீர்– நீண்டபெரும்**
**கங்கைக் கரைதிரிந்த கண்ணன் கழற்களொடு**
**திங்கள் முகம்காண்பீர் தீர்ந்து. (51)**

உயர்ந்த கோயில்களில் மாயன் மதன்மோகனின் உணர்வை, அவன் வேண்டுகின்ற வண்ணம் ஏற்றிடுவீர். நீண்ட பெரிய யமுனையின் கரையில் திரிந்த அவன் கழல்களையும் திங்கள் போன்ற முகத்தையும் அக்கோயில்களுக்குச் சென்று காண்பீர்களாக.

**தீர்ந்திடுமோ காதற் தெவிட்டிடுமோ கண்ணன்பேர்**
**சார்ந்திடுவோம் செங்கண்மாற் சாரதியைச்– சார்ந்தகுரு**
**பக்திவே தாந்தர்நம் பக்கபல மாய்நிற்கச்**
**சக்திவே றென்வேண்டும் சொல்லு? (52)**

கண்ணன்பேரில் உள்ள காதல் தீர்ந்துவிடுமோ? அவன் பெயர் தெவிட்டிடுமோ? செங்கண்மால் பார்த்த சாரதியைச் சரணடைவோமாக.அவனைச் சரணடைந்த பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் நமக்குப் பக்கபலமாய் நிற்க, நம்மைக் கரையேற்றிச் செல்ல வேறு என்ன சக்தி வேண்டும் சொல்லு?

**சொல்லுவேன், பக்திவே தாந்தரைச் சொல்லுதல்**
**வல்வினை போக்க வழிசெய்யும்– தொல்லுலகிற்**
**சங்கீர்த் தனத்தைப்பொற் சைத்தன்யர் தந்தபடி**
**எங்கும் விதைத்தார் இனிது. (53)**

மேலும் மேலும் பக்திவேதாந்தரின் அருமை பெருமைகளைச் சொல்வேனாக. அவ்வாறு சொல்லுதல் வல்வினைகள் போக்க வழிசெய்யும். இந்தப் பழமையான உலகத்தில், கண்ணன் நாம சங்கீர்த்தனத்தைப் பொன் போன்ற நிறமுடைய சைதன்ய மஹாபிரபு தந்ததுபோல் எங்கும் இனிது பரப்பினார்.

**இனிதினிது கண்ணன்பேர் ஏற்றியம்பல் ஏற்றோர்**
**புனிதராய் நிற்பர் புகழ– தனிப்பெரும்**
**மங்கல மானது மற்றில்லை அண்டத்திற்**
**சங்கீர்த் தனம்போற் சிறந்து. (54)**

கண்ணனுடைய திருநாமத்தை ஏற்றுச் சொல்லுதல் மிகவும் இனிமையானதாகும். அவ்வாறு ஏற்றுக் கொள்பவர்கள் புனிதமடைந்து புகழ்பெற்று நிற்பர். இந்தப் பிரபஞ்சத்தில் கண்ணன் நாம சங்கீர்த்தனத்தைவிட மங்களமானது வேறொன்றும் இல்லை. இதுவே உயர்ந்தது.

**சிறந்தபெரும் ஆழ்வார்கட் சீர்த்தமொழி கொண்டு**
**பிறந்த பயனறியப் பாடிச்– சிறந்தபெரும்**
**பேரின்பம் கண்ணனின் பேர்முழுங்கிக் கண்டார்கள்**
**ஆரியர்வே தாந்தரும் ஆங்கு. (55)**

சிறந்த பெருமை படைத்த ஆழ்வார்கள் உயர்ந்த பாடல்களைக் கொண்டு தாங்கள் தோன்றிய பயனறியக் கண்ணனைப் பாடிப் பேரின்பம் கண்டார்கள். பண்பிற் சிறந்த பக்திவேதாந்தரும் அப்படித்தான்.


**ஆங்கு தவம்ஞானம் ஆற்றும் செயல்விநயம்**
**தாங்கி நமக்கருட் தந்திலரேல்– ஓங்கி**
**உலகில் மிருகமாய் ஊர்சுற்றும் நாயாய்ப்**
**பலபிறவி பெற்றுழல்வோம் பட்டு. (56)**

பிரபுபாதர் அவர்கள் அவ்வாறாக உயர்ந்த தவமும், ஞானமும், செய்யும் காரியங்களில் விநயமும் கொண்டு நமக்கு அருள் தந்திராவிட்டால், இவ்வுலகத்தில் நாம் மிருகமாக, ஊர் சுற்றும் நாயாக, பற்பல பிறவிகளைப் பெற்று உழன்று கொண்டு இருந்திருப்போம்.

**பட்டுழலும் சம்சாரப் பாதைகட் சார்தலின்றி**
**விட்டுயர்ந்து மேலோங்க வீடமைத்தார்– திட்டமுடன்**
**நூல்கள் வகுத்தளித்தார், நூதனங்கள் மேற்கொண்டார்**
**ஆல்போற் பெருகல் அறிந்து. (57)**

இவ்வுலகத்தில் நம்மை உழலச் செய்யும் சம்சாரம் என்னும் பாதையை விட்டு நீங்கி மேலே உயர்ந்து செல்வதற்கான பெரிய அமைப்பை ஏற்படுத்தினார். நல்ல திட்டத்துடன் நூல்கள் வகுத்தளித்தார். தாம் ஏற்படுத்திய இயக்கமானது ஆல்போல் பெருகுதல் அறிந்து நூதனமான முறைகளை மேற்கொண்டு அதனால் பலரும் பயனடையும்படி செய்தார்.

**அறிந்தநற் சீடர் அனைத்துவழி சென்று**
**செறிந்தபொருள் நூற்கையிற் சேர்க்க– அறிந்தோர்**
**பெருவாழ்வு பெற்றதாற் பேசிவே தாந்தர்**
**பெருமகிழ்வு கொண்டார் பணிக்கு. (58)**



தனது நூலைப் படித்தவர்கள் பெருவாழ்வு பெற்றதை ஸ்ரீல பிரபுபாதர் பெருமையாகக் கருதினார்

பிரபுபாதரின் விருப்பத்தை அறிந்த நல்ல சீடர்கள் செறிந்த பொருளை உடைய அவரின் நூல்களை எல்லா இடங்களுக்கும் சென்று, மக்களின் கைகளில் சேர்த்தார்கள். நூல்களின் பொருளைப் படித்தறிந்தவர்கள் பெரிய வாழ்வு பெற்றதைப் பிரபுபாதர் பெருமையாகப் பேசினார். தன்னுடைய சீடர்களின் பணியை எண்ணிப் பெருமகிழ்வு கொண்டார்.

**பணிசெய்வார் தம்மிடம் பாங்கில்லை யென்னிற்**
**பணிகொள்வார் நன்றாக்கற் பண்பு– அணிசெய்**
**கருணைதன் கைக்கொண்டு காத்தருள் கின்றார்**
**அரும்குருவே தாந்தரவ் வாறு. (59)**

பணிசெய்வார் இடத்தில் பணிசெய்யும் பாங்கு இல்லை என்றால், பணியை ஏற்றுக்கொள்பவர் அவர்களைத் திருத்தி நன்றாக்குதல் பண்பு. ஒப்பற்ற குருவான பக்திவேதாந்தர் கருணை செய்து, காத்தருளி, தம்மிடம் பணி செய்வாரைத் திருத்திப் பணி கொள்கின்றார்.

**ஆறமைத்தார் யாமுய்ய, ஆயனுக் காட்செய்ய,**
**வேறென்ன வேண்டும் வினவுவேன்– மாறற்று**
**எண்ணம் இனிக்க, இடையன்மேற் கொள்காதல்**
**வண்ணமுற வேண்டுமென்றார் வாழ்ந்து. (60)**

நாம் உய்வதற்கு வழி அமைத்தார், ஆயர் குலத்தில் ஒருவனாகிய கண்ணனுக்குத் தொண்டுசெய்ய வைத்தார். இதைவிட உயர்ந்த பேறு வேறு என்ன வேண்டும் என்று கேட்கின்றேன். மாறுதல் இல்லாமல் கண்ணன் உணர்வு இனிக்க, அவன்பேரில் கொள்கின்ற காதலானது சிறப்புற வேண்டும் என்று நம்மிடையே வாழ்ந்து கூறினார். (தொடரும்)

தயாள் கோவிந்த தாஸ் M.Tech., Ph.D அவர்கள், திருச்சியிலுள்ள அரசாங்கத் தொழிற்சாலையில் பொது மேலாளராகப் பணியாற்றிய வண்ணம் கிருஷ்ண பக்தியைக் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகப் பயிற்சி செய்து வருகிறார்.

# கடவுளை அறிவது எப்படி?

கடவுள் இருக்கின்றாரா? என்ற தலைப்பில் கடவுளின் இருப்பை சென்ற இதழில் பல்வேறு வழிகளில் விளக்கியிருந்தோம். அதன் தொடர்ச்சியாக, கடவுளை எவ்வாறு அறிவது என்பது குறித்து இந்த இதழில் காணலாம்.

வழங்கியவர்: ஜெய கோபிநாத தாஸ்

அறிவைப் பெறுவதற்கு பொதுவாக மூன்று முக்கிய வழிகள் உள்ளன.

**(1) பிரத்யக்ஷ பிரமாணம்**—புலன்களைக் கொண்டு நேரடியாக அடையப்படும் அறிவு

**(2) அனுமான பிரமாணம்**—முந்தைய தகவல்களைக் கொண்டு யூகத்தின் மூலம் பெறப்படும் அறிவு

**(3) சப்த பிரமாணம்**—அங்கீகரிக்கப்பட்ட நபர்களிடமிருந்து பெறப்படும் அறிவு

கடவுளைப் பற்றி அறிந்து கொள்வதற்கு பிரத்யக்ஷ பிரமாணமும் அனுமான பிரமாணமும் பயன்தராதவை. சப்த பிரமாணத்தினால் மட்டுமே இறைவனை அறிய இயலும்.

## பிரத்யக்ஷ பிரமாணம்

நேரடியாகப் புலன்களால் அறிவைப் பெறக்கூடிய வழிமுறை பிரத்யக்ஷ பிரமாணம் எனப்படும். இதில் சில பிரச்சனைகள் உள்ளன. நமது புலன்கள் எல்லைக்குட்பட்டவை. நமது கண்களால் எல்லாவற்றையும் காண இயலாது. அவற்றின் பார்வை அளவு 400 முதல் 700 மில்லிமைக்ரான். நமது காதுகள் 20 முதல் 20,000 ஹெர்ட்ஸ்க்கு இடைப்பட்ட ஒலியலைகளை மட்டுமே கேட்கும் திறன் கொண்டவை. மேலும், நமது புலன்கள் மாயையின் வயப்படுபவை. அதாவது ஒன்றை மற்றொன்றாக அடையாளம் கண்டு கொள்ளக் கூடியவை. இவை நமக்கு முழுமையான ஞானத்தைத் தராது. எனவே, இறைவனை அடைவதற்கான முயற்சியில் பிரத்யக்ஷ பிரமாணம் முழுப் பலனைத் தராது.

## அனுமான பிரமாணம்

புலன்களால் பெற்ற அறிவைக் கொண்டு மனதால் யூகித்து அறிந்து கொள்ளும் வழிமுறை அனுமான பிரமாணம் எனப்படும். அனுமான பிரமாணமானது பிரத்யக்ஷ பிரமாணத்தின் அறிவை அடிப்படையாகக் கொண்டதால் இந்த அறிவும் பூரணமானதாக இருக்க முடியாது.

## சப்த பிரமாணம்

அங்கீகரிக்கப்பட்ட நபர்களிடமிருந்து கேட்பதால் பெறப்படும் அறிவு சப்த பிரமாணம் எனப்படும். உதாரணமாக, உலகச் செய்திகளை அறிந்துகொள்ள நாம் பி.பி.சி சேனலை பார்ப்போம். அவர்கள் பலகாலமாக தவறில்லாமல் ஒளிபரப்பு செய்வதால் அதை நாம் நம்புகிறோம். அதே போன்று மிக முக்கிய விஷயங்களைப் பற்றி அறிய நாம் வேதங்களை அணுக வேண்டும். வேதம் என்றால் 'அறிவு' என்று பொருள். இஃது இந்துக்களுக்கு மட்டும் என்றோ, சமஸ்கிருதம் அறிந்தவர்களுக்கு மட்டும் என்றோ கிடையாது. வேதங்கள் பரம்பொருளான இறைவனைப் பற்றியவை, எல்லாருக்கும் உரித்தானவை. இன, மத, பேதத்திற்கு அப்பாற்பட்டவை. வேதத்தின் வார்த்தைகள் பழமையானவை. எந்த வித மாற்றமும் இல்லாதவை. சில உதாரணங்கள்:

(1) பூமி கோள வடிவமானது.

(2) மலத்தை அசுத்தமானதாக உரைக்கும் வேதங்கள், பசுஞ்சாணத்தை மிகவும் தூய்மையானதாகக் கூறுகின்றன. பசுஞ்சாணம் ஒரு கிருமி நாசினி என்பது 1940களில் மட்டுமே கண்டறியப்பட்டது. ஆனால் வேத கலாச்சாரத்தில் பசுஞ்சாணம், தூய்மைபடுத்துவதற்காக உபயோகப்பட்டதை நாம் எளிதில் காணலாம்.

(3) ஸ்ரீமத் பாகவதத்தின் மூன்றாவது காண்டத்தில் கருவின் வளர்ச்சியானது கருத்தரிப்பின் காலத்திலிருந்து குழந்தை பிறக்கும் நாள்வரை விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

(4) புராணங்களில் எதிர்கால நிகழ்வுகளைப் பற்றிய முன்னறிவிப்பினைக் காணலாம்: புத்தர், ஏசு, நபிகள் நாயகம், சந்திர குப்தர், அசோகர் போன்றவர்களைப் பற்றிய குறிப்பு புராணங்களில் சுமார் 5000 வருடங்களுக்கு முன்பே இடம் பெற்றுள்ளது.

(5) கலி யுகத்தின் நிலைமை பற்றியும் பாகவத புராணத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

வேதங்கள் ஸ்ருதி, கேட்டறியப்படும் ஞானம் என்று அழைக்கப்படுகின்றன. கலி யுகத்திற்கு முன்பு வேதங்கள் எழுத்து வடிவத்தில் கிடையாது. சுமார் 5000 வருடங்களுக்கு முன்பு, வேத வியாசர் இவற்றை எழுத்து வடிவத்தில் அளித்தார். கடவுளைப் பற்றி நாம் வேதங்களிலிருந்து தெரிந்துகொள்ள வேண்டும். வேதங்களையும் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளிடமிருந்து கேட்டு அறிந்துகொள்ள வேண்டும். அதாவது முறையான குரு-சீடப் பரம்பரையில் வரும் ஓர் அதிகாரியிடமிருந்து தெரிந்துகொள்ள வேண்டும்; மற்றவர்களிடமிருந்து அல்ல.

வேத சாஸ்திரங்களைப் பக்குவமான நபர்களிடமிருந்து பெற்றால், கடவுளை அறிவதற்கான வழிமுறையில் நம்மால் ஈடுபட முடியும். அம்முறையில் படிப்படியாக முன்னேறி, காலப்போக்கில் கடவுளை உணர முடியும்.

ஜெய கோபிநாத தாஸ் B.E அவர்கள், இஸ்கான் சென்னை கிளையில் முழு நேர பிரம்மச்சாரியாகத் தொண்டாற்றி வருகிறார்.




தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அருளிய "பகவத் கீதை உண்மையுருவில்," 56 மொழிகளில், சுமார் 7 கோடி பிரதிகளாக உலக மக்களின் கரங்களில் பவனி வந்துள்ளது. உலகெங்கிலும் ஆயிரக்கணக்கான பக்தர்களை உருவாக்கிய தனிச்சிறப்பினை **பகவத் கீதை உண்மையுருவில்** பெற்றுள்ளது. ஸ்ரீல பிரபுபாதரால் அருளப்பட்ட அப்புத்தகத்தினை அனைவரும் நன்கு படித்துப் பயன்பெற உதவும் ஒரு சிறு முயற்சியே இந்தக் கண்ணோட்டம்.

இந்த நீண்ட கண்ணோட்டத்தின் பூரண பலனை அனுபவிக்க வேண்டுமெனில், ஸ்ரீல பிரபுபாதரின் பகவத் கீதையை இத்துடன் இணைத்து கவனமாக நீங்கள் படிக்க வேண்டியது மிகவும் அவசியம். **பகவத் கீதை உண்மையுருவில்** நூலிற்காக ஸ்ரீல பிரபுபாதர் வழங்கிய **அறிமுகத்தினை** சென்ற இதழில் கண்டோம். கீதையின் முதல் அத்தியாயத்தினை இந்த இதழிலும் இனிவரும் இதழ்களில் இதர அத்தியாயங்களையும் காணலாம்.

# குருக்ஷேத்திரப் போர்க்களத்தில் படைகளைக் கவனித்தல்

## பகவத் கீதை உரைக்கப்பட்ட சூழ்நிலை

சுமார் 5000 வருடங்களுக்கு முன்பு மொத்த உலகமும் அஸ்தினாபுரத்தைத் (தற்போதைய தில்லியைத்) தலைநகராகக் கொண்ட குரு வம்சத்தினரால் ஆளப்பட்டு வந்தது. குரு வம்சத்தினரின் செயல்களை எடுத்துரைக்கும் மாபெரும் காவியமான மஹாபாரதம், பாரத நாட்டின் பெருமை மிகு வரலாற்றை அறிவதற்குரிய முக்கிய இலக்கியமாகும்.

திருதராஷ்டிரரும் பாண்டுவும் குரு வம்சத்தில் பிறந்த சகோதரர்கள். மூத்த சகோதரரான திருதராஷ்டிரர் குருடராகப் பிறந்த காரணத்தினால், அவருக்குச் சேர வேண்டிய அரியணை பாண்டுவிடம் ஒப்படைக்கப்பட்டது. யுதிஷ்டிரர், பீமன், அர்ஜுனன், நகுலன், சகாதேவன் ஆகிய ஐந்து புதல்வர்களைப் பெற்றெடுத்த பாண்டு, இளம் வயதிலேயே மரணமடைந்தார். அதன் பின்னர், துரியோதனனைத் தலைமையாகக் கொண்ட திருதராஷ்டிரரின் நூறு குழந்தைகளும் பாண்டுவின் ஐந்து புதல்வர்களும் ஒரே அரசவையில் வளர்க்கப்பட்டனர். தேர்ச்சி பெற்ற துரோணரிடம் போர்க்கலையைப் பயின்ற அவர்கள், பாட்டனார் பீஷ்மரிடமிருந்து அறிவுரைகளைப் பெற்று வளர்ந்தனர்.

அனைவரிலும் மூத்தவரான யுதிஷ்டிரரே அரியணைக்கு உரியவர் என்றபோதிலும், பொறாமையினால் பாண்டவர்களை வெறுத்த துரியோதனன் தனது தந்தை திருதராஷ்டிரருடன் இணைந்து பல்வேறு திட்டங்களைத் தீட்டி பாண்டவர்களைக் கொல்ல முயற்சித்தான். அம்முயற்சிகளின் ஒரு கட்டமாக நடந்த சூதாட்டத்தில், பாண்டவர்கள் தங்களது அரசை இழந்து பதிமூன்று வருடங்கள் நாட்டை விட்டு விலகி வாழ்ந்தனர். வனவாசம் முடிந்த பின்னர் நாட்டைத் திருப்பித் தரும்படி துரியோதனனிடம் அவர்கள் கேட்ட போது அவன் திட்டவட்டமாக மறுத்தான்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் உட்பட பலரும் நடத்திய சமரசப் பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிந்ததால் போர் தவிர்க்க முடியாததாயிற்று.

உலகிலிருந்த எல்லா அரசர்களும் அஸ்தினாபுரத்தின் கீழ் இருந்ததால், அவர்கள் அனைவரும் இரு பிரிவாகப் பிரிந்து, சிலர் துரியோதனன் பக்கமும் சிலர் யுதிஷ்டிரர் பக்கமும் இணைந்து போரில் ஈடுபடுவதற்காக குருக்ஷேத்திரத்தில் கூடினர். இரு தரப்பினருக்கும் உறவினரான கிருஷ்ணர், துரியோதனனின் விருப்பப்படி தனது படைகளை அவனுக்கு அளித்துவிட்டு, ஆயுதம் ஏந்தாமல் அர்ஜுனனின் தேரோட்டியாக பாண்டவர்களின் பக்கம் இணைந்திருந்தார்.

## போருக்குத் தயாராகுதல்

பதினெட்டு அத்தியாயங்களைக் கொண்ட பகவத் கீதையின் முதல் அத்தியாயம், தர்மக்ஷேத்திரமான குருக்ஷேத்திரத்தில் போர் புரியும் எண்ணத்துடன் கூடிய தனது மகன்களும் பாண்டுவின் மகன்களும் என்ன செய்தனர்? என்ற திருதராஷ்டிரரின் கேள்வியுடன் தொடங்குகின்றது. புனித ஸ்தலத்தின் தாக்கத்தினால், தர்மத்தைப் பின்பற்றும் பாண்டவர்கள் ஒருவேளை மனம் மாறி போரிலிருந்து விலகி விடலாம் என்ற எதிர்பார்ப்புடனும், அதர்மத்தின் பக்கம் இருக்கும் தனது மகன்கள் போரில் வெற்றி பெறுவது இயலாத செயல் என்ற எண்ணத்துடனும் அக்கேள்வி அமைந்திருந்தது. வியாசரின் கருணையால் தெய்வீகப் பார்வையைப் பெற்றிருந்த திருதராஷ்டிரரின் காரியதரிசியான சஞ்ஜயன் அரண்மனையில் இருந்தபடியே போர்க்களத்தின் காட்சியை எடுத்துரைக்கத் தொடங்குகிறான்.

**துரியோதனனின் இராஜ தந்திர பேச்சு:** திருதராஷ்டிரரை மகிழ்விப்பதற்காக, சஞ்ஜயன் துரியோதனனை 'மன்னன்' என்று வர்ணித்தான். பாண்டவர்களின் படையைப் பார்வையிட்ட துரியோதனன், தன் ஆச்சாரியரான துரோணரை அணுகி, அவரின் சீடனான துருபத குமாரனால் அணிவகுக்கப்பட்டுள்ள பாண்டு புத்திரர்களின் மாபெரும் படையைப் பார்வையிடுமாறு கூறினான். தனது பிரியமான சீடர்களான பாண்டவர்களிடம் துரோணாசாரியர் பரிவு காட்டுவார் என்று சந்தேகம் கொண்ட சிறந்த இராஜதந்திரியான துரியோதனன், துரோணரைத் தூண்டி விடுவதற்குத் தகுந்தாற் போல பேசினான். துரோணரைக் கொல்வதற்காகவே பிறந்த துருபத குமாரனான திருஷ்டத்யும்னனின் பெயரை முதலில் சுட்டிக் காட்டிய அவன், அதனைத் தொடர்ந்து, பாண்டவ படையின் மிகச்சிறந்த வெற்றிகொள்ளப்பட இயலாத மாவீரர்களான அர்ஜுனனையும் பீமனையும் குறிப்பிட்டான். அர்ஜுனனும் பீமனும் தனக்குப் பெரும் தலைவலியாக இருப்பார்கள் என்பதை துரியோதனன் உணர்ந்திருந்தான். அதன் பின்னர், பாண்டவப் படையின் இதர மாவீரர்களைச் சுட்டிக் காட்டினான்.



திருதராஷ்டிரரின் வேண்டுகோளின்படி, போர்க்களத்தின் சம்பவங்களை அரண்மனையில் இருந்தபடியே சஞ்ஜயன் பார்த்து உரைத்தல்

துரோணாசாரியர் துவண்டுவிடக் கூடாது என்பதை உணர்ந்து, தனது படையின் மாவீரர்களையும் அவரிடம் அறிவித்தான். முதலில் முகஸ்துதியாக துரோணரின் பெயரை உரைத்து, பின்னர், பீஷ்மர், கர்ணன், கிருபாசாரியர் போன்ற வெற்றி வீரர்களைக் குறிப்பிட்டான். பீஷ்மரால் பாதுகாக்கப்பட்ட தமது படையின் பலம் அளவிட இயலாதது என்றும், பீமனால் பாதுகாக்கப்பட்ட பாண்டவ சேனை அளவிடக்கூடியதே என்றும் கூறி பீஷ்மரையும் உற்சாகப்படுத்தினான். அவனது பேச்சைக் கேட்ட பீஷ்மர், அதனால் மயங்காதவராக தனது சங்கை சிம்ம கர்ஜனை போன்று உரக்க ஊதினார். பீஷ்மரின் உற்சாக முழக்கம் துரியோதனனுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. பீஷ்மரைத் தொடர்ந்து பல்வேறு சங்குகள், மத்தளங்கள், முரசுகள், கொம்புகள், தாரைகள் என அனைத்தும் ஒரே சமயத்தில் கௌரவப் படையில் முழங்க, அப்பேரொலி மிகவும் பயங்கரமாக இருந்தது.

## பாண்டவர்களது வெற்றியின் சின்னங்கள்

மறுதரப்பில், வெள்ளைக் குதிரைகள் பூட்டிய மிகச்சிறந்த ரதத்தில் அமர்ந்திருந்த பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் தனது பாஞ்சஜன்யம் என்னும் தெய்வீக சங்கையும், அர்ஜுனன் தனது தேவதத்தம் எனும் தெய்வீக சங்கையும் முழங்க, அவர்களைத் தொடர்ந்து இதர படைவீரர்கள் பல்வேறு சங்குகளை முழங்கினர். அச்சங்கொலிகளின் முழக்கம் பேரொலியாக எழுந்து பூமியும் வானமும் நடுங்குமாறு எதிரொலிக்க, கௌரவர்களின் இதயங்கள் சிதறின. அச்சமயத்தில் ஹனுமான் கொடியைத்

தாங்கிய ரதத்தில் இருந்த அர்ஜுனன், கிருஷ்ணரிடம் பேசத் தொடங்கினான்.

(அக்னி தேவரால் பரிசளிக்கப்பட்டிருந்த அர்ஜுனனின் மிகச்சிறந்த ரதம், கிருஷ்ண அர்ஜுனர்களின் தெய்வீக சங்கு கள், பாண்டவர்களின் பக்கம் இருக்கும் இலக்ஷ்மியின் கணவரான (மாதவரான) கிருஷ்ணர், சங்கொலியைக் கேட்ட கௌரவர்களின் இதயச் சிதறல், அர்ஜுனனுடைய ரதத்தின் கொடியில் எப்போதும் வெற்றியைத் தரும் ஹனுமான் குடிகொண்டிருத்தல் ஆகிய அறிகுறிகள், வெற்றி பாண்டவர்களின் பக்கமே என்பதை எடுத்துக்காட்டுகின்றன.)

## பக்தவத்ஸலரான ஸ்ரீ கிருஷ்ணர்

போர்புரியும் விருப்பத்துடன் குழுமியிருந்த அனைவரையும் காண்பதற்கான ஆவல் கொண்ட அர்ஜுனன், தனது தேரோட்டியாகச் செயல்பட்ட ஸ்ரீ கிருஷ்ணரிடம், ரதத்தை இரு சேனைகளுக்கும் இடையில் செலுத்துமாறு வேண்டினான். கிருஷ்ணரை *அச்யுத* (வீழ்ச்சியடையாதவர்) என்று அழைத்ததன் மூலம், தனது சாரதியாக செயல்பட்டாலும், அவர் எப்போதும் புருஷோத்தமரான முழுமுதற் கடவுளே என்பதை அர்ஜுனன் உறுதி செய்கின்றான். தனது காரணமற்ற கருணையால் முழுமுதற் கடவுள் ஸ்ரீ கிருஷ்ணர் தனது நண்பனும் பக்தனுமான அர்ஜுனனின் தொண்டில் ஈடுபட்டிருந்தார். தேரோட்டியின் நிலையை அவர் ஏற்றிருந்ததால், அவர் தனது உன்னத நிலையிலிருந்து வீழ்ச்சியடைந்துவிட்டதாக நினைக்கக் கூடாது. பகவானுக்கும் பக்தனுக்கும் இடையிலான உன்னத உறவின்படி, பக்தன் எப்போதுமே பகவானுக்குத் தொண்டாற்ற காத்துக் கொண்டுள்ளான்; அதுபோலவே, பகவானும் தனது பக்தனுக்குத் தொண்டாற்ற காத்துக் கொண்டுள்ளார். பக்தவத்ஸலராக (பக்தர்களிடம் பற்று கொண்டவராக) விளங்கும் கிருஷ்ணரின் மகிமையை அவர் அர்ஜுனனுக்குத் தேரோட்டுவதன் மூலம் தெரிந்துகொள்ளலாம்.

அர்ஜுனனின் ஆணைப்படி, பீஷ்மருக்கும் துரோணருக்கும் முன்னிலையில், ரதத்தை இரு சேனைகளுக்கும் மத்தியில் நிறுத்திய கிருஷ்ணர், குரு வம்சத்தினரைப் பார்வையிடும்படி அர்ஜுனனிடம் கூறினார். தனது நண்பனான அர்ஜுனனைக் கருவியாகக் கொண்டு உலக மக்கள் அனைவருக்கும் பகவத் கீதை என்னும் அரிய அறிவை அளிக்கும் பொருட்டு, அறியாமைக்கு அப்பாற்பட்ட அர்ஜுனனை அறியாமைக்கு உட்படுத்தினார் இறைவன். இரு சேனைகளுக்கும் நடுவில் நின்றபடி, தந்தைமார்கள், பாட்டனார்கள், ஆச்சாரியர்கள் உட்பட பல்வேறு உறவினர்களையும் நண்பர்களையும் பார்வையிட்ட அர்ஜுனன், பாசத்தினால் மூழ்கினான்.



கௌரவர்களின் இதயம் சிதறும்படியாக கிருஷ்ணரும் அர்ஜுனனும் தத்தம் தெய்வீக சங்குகளை முழங்குதல்

## அர்ஜுனன் போரிட மறுத்தல்

பாசத்தால் மூழ்கிய அர்ஜுனன், பல்வேறு காரணங்களை முன்வைத்து தன்னால் போரிட இயலாது என்று கிருஷ்ணரிடம் தெரிவித்தான்.

**உறவினர்களின் மீதான பாசம்:** போரிடும் உணர்வுடன் தன்முன் கூடியிருந்த நண்பர்களையும் உறவினர்களையும் கண்டு, அர்ஜுனனின் அங்கங்கள் நடுங்கி வாய் உலர்ந்தது, மயிர்கூச்செறிந்தது, கையிலிருந்த புகழ் பெற்ற காண்டீப வில்லும் நழுவியது. மனம் குழம்பித் தன்னையே மறந்தான், கெட்ட சகுனங்களையே கண்டான். மாபெரும் போர் வீரனான அர்ஜுனன் போரைக் கண்டு அச்சப்படவில்லை; மாறாக, போரில் தனக்கு பிரியமான உறவினர்கள் அனைவரையும் சந்திக்க உள்ளதே என்பதை எண்ணிப் போரிட மறுத்தான்.

**சுகம் அனுபவிப்பதில் உள்ள தடை:** பசியில்லாதவன் சமைக்க விரும்பாததைப் போல, உறவினர்களைக் கொல்வதால் மகிழ்ச்சியடைய முடியாது என்பதை உணர்ந்த அர்ஜுனன், போரினால் பெறப்படும் வெற்றியையோ இராஜ்யத்தையோ இன்பத்தையோ விரும்பவில்லை; மாறாக, வனத்திற்குச் சென்று விரக்தியுடன் தனிமையில் வாழ்வதற்கும் தயாரானான். ஆட்சி, மகிழ்ச்சி, வாழ்க்கை ஆகியவற்றை யாருக்காக அவன் விரும்பினானோ, அவர்கள் அனைவரும் அவனுக்கு எதிரில் அணிவகுத்திருக்க, அவர்களை அழித்தபின் அனுபவிப்பதற்கு என்ன இருக்கும் என்று எண்ணினான். அவர்கள் தன்னைக் கொன்றாலும் சரி, தான் அவர்களை ஏன் கொல்ல வேண்டும்? என்று கேள்விகேட்ட அர்ஜுனன், இந்த பூமி ஒருபுறமிருக்கட்டும், மூவுலகமும் கிடைப்பதாக இருந்தாலும், தான் போரிடத் தயாராக இல்லை என்பதை வெளிப்படுத்தினான். சொந்த உறவினர்களைக் கொலை செய்துவிட்டு எவ்வாறு மகிழ்ச்சியடைய முடியும்? என்றும் வினவினான்.



உறவினர்களை எதிர்தரப்பில் கண்ட அர்ஜுனன், கிருஷ்ணரால் மயக்கப்பட்டு, பல்வேறு காரணங்களைக் கூறிப் போரிட மறுத்தல்

**பாவத்தின் விளைவுகளைக் கண்ட பயம்:** திருதராஷ்டிரரின் மகன்கள் பல்வேறு அக்கிரமங்களைச் செய்திருந்தபோதிலும், அவர்களைக் கொல்வதால் தனக்கு பாவம் வரும் என்று கூறிய அர்ஜுனன், பேராசையால் மதியிழந்த எதிர்தரப்பினர், துரோகம் செய்வதையும் குலநாசம் செய்வதையும் பாவம் என்று நினைக்கவில்லை என்றும், மாறாக, அவற்றை பாவம் என்று அறிந்த யாம் எவ்வாறு அப்பாவச் செயல்களில் ஈடுபட முடியும் என்றும் வாதிட்டான். மேலும், குல தர்மத்தைக் கெடுத்தவர்கள் நரகத்திற்குத்தான் செல்வர் என்பதையும் உறுதிபட உரைத்தான்.

**குலம் நாசமடையும்:** பெரியோர்கள் கொல்லப் படுவதால் குலம் அழிவடைந்து, குல தர்மம் கெட்டுவிடும்; வம்சத்தில் மீதமிருப்பவர்கள் அதர்மங்களில் ஈடுபடுவர்; அதர்மம் தலையெடுத்தால் குடும்பப் பெண்கள் களங்க மடைவர்; பெண்மையின் சீரழிவால் தேவையற்ற சந்ததி உண்டாகும்; தேவையற்ற சந்ததியினர் நரக நிலையை ஏற்படுத்துவர்; அதனால் அக்குடும்பங்களின் முன்னோர்கள் வீழ்ச்சியடைவர், அவர்களுக்குப் பிண்டமும் நீரும் வழங்கி செய்ய வேண்டிய காரியங்கள் நடைபெறாது—என ஒரு பட்டியலை வழங்கிய அர்ஜுனன், போரினால் குலம் நாசமடையும் என்ற கருத்தைத் தெரிவித்தான்.

இராஜ்ய சுகத்தை அனுபவிக்கும் ஆசையால், சொந்த உறவினர்களையும் கொல்லத் துணிந்திருப்பதை பாவமாக உரைத்த அர்ஜுனன், ஆயுதத்தையும் போரையும் துறந்து ஆயுதம் ஏந்திய திருதராஷ்டிரரின் மகன்களால் கொல்லப்படுவதை சிறந்ததாக உரைத்தான். சோகத்தால் மூழ்கிய அந்நிலையில், வில்லையும் அம்பையும் ஒதுக்கிவிட்டு ரதத்தில் அமர்ந்துவிட்டான்.

ரதத்தில் அமர்ந்த அர்ஜுனனிடம் கிருஷ்ணர் கூறிய கருத்துகளே மனித சமுதாயம் முழுவதற்கும் உரித்தான உன்னதமான பகவத் கீதை என்னும் ஞானக் களஞ்சியம். அவர் என்ன கூறினார் என்பதை அடுத்த இதழிலிருந்து (இரண்டாம் அத்தியாயத்திலிருந்து) காணலாம்.

*ஸ்ரீ கிரிதாரி தாஸ் அவர்கள், ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் பத்திரிகை உட்பட பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளையின் வெளியீடு களுக்குத் தொகுப்பாசிரியராகத் தொண்டாற்றி வருகிறார்.*

## முதல் அத்தியாயத்தின் நான்கு பகுதிகள்

**(1) போருக்குத் தயாராகுதல்** (1–13)

- திருதராஷ்டிரரின் கேள்வி (1)
- துரியோதனனின் இராஜதந்திரப் பேச்சு (3–11)

**(2) பாண்டவர்களது வெற்றியின் சின்னங்கள்** (14–20)

- தர்மக்ஷேத்ரே (1)—தர்மக்ஷேத்திரமான குருக்ஷேத்திரத்தில் போர் நடைபெறுதல்
- மஹதி ஸ்யந்தனே (14)—அக்னி தேவரால் பரிசளிக்கப்பட்டிருந்த மிகச்சிறந்த ரதம்
- மாதவ (14)—அதிர்ஷ்ட தேவதையின் கணவரான கிருஷ்ணர் பாண்டவர்களின் தரப்பில் இருத்தல்
- திவ்யௌ ஷங்கௌ (14)—திவ்யமான சங்குகள்
- ஹ்ருதயானி வ்யதாரயத் (19)—கௌரவர்களின் இதயங்கள் சிதறின
- கபி-த்வஜ: (20)—ஹனுமானின் கொடியைத் தாங்கப் பெற்றவன்

**(3) பக்தவத்ஸலரான ஸ்ரீ கிருஷ்ணர்** (21–27)

- பக்தர்களிடம் பகவானுக்கு உள்ள பற்றுதலும் உறவும்

**(4) அர்ஜுனன் போரிட மறுத்தல் (28–46)**

போரைத் தவிர்ப்பதற்கான அர்ஜுனனின் காரணங்கள்:

- உறவினர்களின் மீதான பாசம் (28–30)
- சுகம் அனுபவிப்பதில் உள்ள தடை (31–35)
- பாவ விளைவுகளைக் கண்ட பயம் (36–38, 43–44)
- குலம் நாசமடையும் (39–43)

# தொழில்நுட்பமும் வேலையில்லாத் திண்டாட்டமும்

*தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதருக்கும் அவரது சீடர் ஒருவருக்குமிடையே ஜுன் 1974இல் ஜெனிவாவில் நிகழ்ந்த உரையாடல்.*


**சீடர்:** சமீபத்தில் இந்தியாவின் அரசியல்வாதி ஒருவர் எண்பது சதவிகித இந்திய மக்கள் கிராமங்களில் வசிப்பதாகப் பேசினார். அவரது கொள்கை விவசாயத்தில் தொழில் நுட்பத்தை அதிகரிக்க வேண்டும் என்பதாகும். கோதுமையை கையினால் அறுவடை செய்வதற்குப் பதிலாக இயந்திரத்தையும், எருதுகளால் உழுவதற்குப் பதிலாக டிராக்டரையும் பயன்படுத்த அவர் விரும்புகிறார்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** இந்தியாவில் நிறைய பேர் ஏற்கனவே வேலையில்லாமல் இருப்பதால், இயந்திரங்களை அதிக அளவில் புகுத்துவது நல்ல திட்டமல்ல. நூறு மனிதர்களின் வேலையை இயந்திரத்தின் உதவியுடன் ஒரு மனிதனால் செய்ய முடியும். மற்றவர்கள் ஏன் வேலையில்லாமல் இருக்க வேண்டும்? ஒரே ஒருவரை வேலைக்கு அமர்த்துவதற்குப் பதில் நூறு பேரை அமர்த்தலாமே? இங்கே மேலை நாடுகளில் கூட வேலையில்லாத் திண்டாட்டம் அதிக அளவில் உள்ளது. ஏனெனில் மேலை நாடுகளில், எல்லாம் இயந்திரங்களால் செய்யப்படுகின்றன. இதனால் செய்வதற்கு ஏதுமின்றி விரக்தியுடன் அலையும் இளைஞர்களை, ஹிப்பிகளை உருவாக்குகின்றனர். இது மற்றொரு விதமான வேலையில்லாத் தன்மை. இவ்வாறு பல்வேறு வகைகளில் இயந்திரங்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தை உருவாக்குகின்றன.

அனைவரும் வேலை பெற வேண்டும்; இல்லையெனில் தொல்லையே வரும். "வேலையற்ற மனம் தீய எண்ணங்களின் உற்பத்திக்கூடம்." பல மக்கள் வேலையில்லாமல் இருக்கும் பொழுது, ஏன் இயந்திரங்களைப் புகுத்தி வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகரிக்க வேண்டும்? நல்ல கொள்கை என்னவெனில், எவரும் வேலையில்லாமல் இருக்கக் கூடாது; ஒவ்வொருவரும் சுறுசுறுப்பாகச் செயல்பட வேண்டும்.

**சீடர்:** ஆனால் இயந்திரங்கள் தமக்கு பலமணி நேரக் கடுமையான உழைப்பிலிருந்து விடுதலை தருவதாக சிலர் வாதிடலாம்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** எதற்கு இந்த விடுதலை? இது குடிப்பதற்கும் பலவகைப்பட்ட அபத்தங்களைச் செய்வதற்கும் வழிவகுக்கும். இத்தகு விடுதலையின் பொருள் என்ன? மக்கள் கிருஷ்ண உணர்வை வளர்ப்பதற்காக அவர்களை விடுதலை செய்தால், அது வேறு விஷயம். நமது கிருஷ்ண பக்தி இயக்கத்தில்கூட, யாராவது வந்தால், அவரையும் முழுவதுமாக ஏதாவதொரு பணியில் ஈடுபடுத்த வேண்டும். இந்த இயக்கம் உண்ணுவதற்கும் உறங்குவதற்கும் அல்லாமல் கிருஷ்ணருக்காக வேலை செய்யவே உள்ளது. எனவே, கிருஷ்ண பக்தி இயக்கத்திலும் சரி, வெளி சமுதாயத்திலும் சரி, அனைவருக்கும் வேலை கொடுத்து அவர்களை



சுறுசுறுப்பாக வைத்திருத்தல் அவசியம். அப்படியிருப்பின் நல்லதொரு நாகரிகம் திகழும்.

வேத கலாச்சாரத்தில் அனைவரும் வேலை செய்கிறார்களா என்பதை கவனிக்க வேண்டியது சமூகத் தலைவரின் தலையாய கடமையாகும். மக்கள், பிராமணர் (பண்டிதர் அல்லது ஆசிரியர்), சத்திரியர் (இராணுவ அல்லது அரசியல் தலைவர்), வைசியர் (விவசாயி அல்லது வியாபாரி), அல்லது சூத்திரர் (தொழிலாளி) என ஏதாவதொரு விதத்தில் ஒவ்வொருவரும் வேலை செய்ய வேண்டும். அனைவரும் வேலை செய்தால் மட்டுமே அமைதி நிலவும். ஆனால் தற்போது தொழில்நுட்பத்தின் காரணமாக, வேலையில்லாத் திண்டாட்டம் தோன்றி, சோம்பேறிகள் பெருமளவில் உள்ளனர். ஹிப்பிகள் வெறும் சோம்பேறிகளே. அவர்கள் எதையும் செய்ய விரும்புவதில்லை.

**சீடர்:** தொழில்நுட்பத்தால் நாம் மேலும் திறமையுடன் அதிக அளவில் வேலை செய்யலாம் என்றும், அதனால் உற்பத்தித் திறன் அதிகரிக்கின்றது என்றும் மற்றொரு வாதம் ஏற்படுகிறதே.

**ஸ்ரீல பிரபுபாதர்:** உற்பத்தித் திறன் குறைவாக இருந்தாலும், அதிக மக்கள் வேலைவாய்ப்பு பெறுவதே சிறந்ததாகும். பகவத் கீதையில் (18.48) கிருஷ்ணர் கூறுகிறார்,

ஸஹ-ஜம் கர்ம கௌந்தேய ஸ-தோஷம் அபி ந த்யஜேத்
ஸர்வாரம்பா ஹி தோஷேண தூமேனாக்னிர் இவாவ்ருதா:

"நெருப்பு புகையால் சூழப்பட்டிருப்பதைப் போல, ஒவ்வொரு முயற்சியும் ஏதேனும் ஒரு தோஷத்தால் சூழப்பட்டுள்ளது. எனவே, குந்தியின் மகனே, முழுவதும் தோஷம் நிறைந்ததாக இருந்தாலும், தனது இயற்கையிலிருந்து தோன்றிய தொழிலை ஒருவன் துறக்கக் கூடாது." மேலும், பேகாரீ ஸே பேகா$_3$ரீ அச்சீ ஹை என்று இந்தியில் பழமொழி ஒன்று உள்ளது. பேகாரீ (bekārī) என்பது "வேலையின்மை" என்றும், பேகா$_3$ரீ (begārī) என்பது "ஊதியமின்றி உழைப்பது" என்றும் பொருள்படும். அதாவது, வேலையின்றி இருப்பதைக் காட்டிலும் ஊதியமின்றி உழைப்பது சிறந்தது என்று பொருள். இந்தியாவில் கிராமவாசிகள் பலர் வியாபாரிகளையோ நற்பண்புகளுடைய ஒருவரையோ அணுகி, "எனக்கு ஏதாவது வேலையிருந்தால் தாருங்கள், எனக்குச் சம்பளம் தேவையில்லை. உங்களுக்கு விருப்பமிருந்தால் ஏதாவது சாப்பிடத் தாருங்கள். இல்லையெனில் அதுவும் வேண்டாம்" என கோருவதை நாங்கள் கண்டுள்ளோம். நீங்கள் ஒரு நற்பண்புள்ள நபரிடம் வேலை செய்தால் அவர் உங்களுக்கு சாப்பிட ஏதாவது தரமாட்டாரா என்ன? உடனேயே அந்த தொழிலாளிக்கு ஒரு வேலை கிடைக்கப் பெற்று, உணவும் தங்க இடமும் பெறக்கூடும். பின்னர், அவன் சரியாக வேலை செய்வதைப் பார்த்து, "சரி இந்த சம்பளத்தைப் பெற்றுக்கொள்," என அந்த நற்பண்பாளர் கூறுவார். எனவே, வேலையில்லாமல் சோம்பேறியாக இருப்பதைவிட எந்த ஓர் ஊதியமும் பெறாமல் வேலை செய்வது சிறந்ததாகும். வேலையின்றி இருப்பது மிகவும் அபாயகரமான நிலையாகும். நவீன நாகரிகத்தில் இயந்திரங்கள் மிகுதியாக உள்ளதால், அதிக அளவில் வேலையின்றி இருக்கும் மக்கள் சோம்பேறிகளாக உள்ளனர். இது நல்லதல்ல.

**சீடர்:** இக்கருத்துகள் எல்லாம் மிகப் பழமையானவை என நிறைய பேர் சொல்லக்கூடும். பெருமளவில் வேலையில்லாத் திண்டாட்டம் இருப்பினும், தொழில்நுட்பத்தினால் கடினமான வேலையிலிருந்து விடுதலையும், தொலைக்காட்சி, திரைப்படங்கள், மோட்டார் வாகனங்கள் போன்றவற்றால் மகிழ்ச்சியும் பெறுவதால் இவர்கள் அதையே விரும்புகிறார்கள்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** தொழில்நுட்பம் விடுதலை தரக்கூடியது அல்ல. மாறாக, அது நரகத்திற்கான தடையற்ற வழியாகும். அது விடுதலையல்ல. ஒவ்வொருவரும் அவரவரது திறமைக்கேற்ப வேலை செய்ய வேண்டும். உங்களுக்கு நல்ல புத்திசாலித்தனம் இருப்பின், சமய நூல்களைப் படித்து, புத்தகங்கள் எழுதி, அடுத்தவர்களுக்கு அறிவு புகட்டி, பிராமணரின் பணியைச் செய்யலாம். உங்கள் ஜீவனாம்சத்தைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. அதனைச் சமூகம் கொடுக்கும். வேத கலாச்சாரத்தில் பிராமணர்கள் ஊதியத்திற்காக வேலை செய்தது இல்லை. அவர்கள் எப்பொழுதும் வேத இலக்கியங்களைப் படித்துக் கொண்டும், மற்றவர்களுக்கு போதித்துக் கொண்டும் சுறுசுறுப்பாக இருந்ததால், சமூகம் அவர்களுக்கு உணவளித்தது.



கிருஷ்ணரை மையமாக வைத்து, புத்திசாலிகள், ஆட்சியாளர்கள், வணிகர்கள், தொழிலாளர்கள் ஆகிய நான்கு பிரிவுகளைக் கொண்ட சமூகத்தில், வேலையில்லை என்ற பேச்சுக்கே இடமில்லை.

சத்திரியர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் சமூகத்தின் இதர உறுப்பினர்களுக்குப் பாதுகாப்புத் தர வேண்டும். ஆபத்துகளிலிருந்தும் தாக்குதல்களிலிருந்தும் மக்களை சத்திரியர்கள் காக்க வேண்டும். அதற்காக அவர்கள் வரி விதிக்கலாம். அடுத்ததாக, சத்திரியர்களைவிட அறிவு குறைவாக உள்ளவர்கள் வைசியர்கள், வணிக மரபினர். அவர்கள் உணவு உற்பத்தியிலும் பசுவைப் பராமரிப்பதிலும் ஈடுபடுகிறார்கள். இவை அவசியமானவை. இறுதியாக வரும் சூத்திரர்கள் மேற்கண்ட மூன்று பிரிவினருக்கும் உதவுபவர்கள்.

இவை இயற்கையினால் உருவாக்கப்பட்ட சமூகப் பிரிவுகளாகும். இது கிருஷ்ணரால் உருவாக்கப்பட்டதால் (*சாதுர்-வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம்*) மிகவும் நல்லதாகும், இதில் ஒவ்வொருவருக்கும் வேலை கிடைக்கிறது. புத்திசாலிப் பிரிவினர் வேலை பெறுகின்றனர், சத்திரியர்கள் வேலை பெறுகின்றனர், வியாபாரிகள் வேலை பெறுகின்றனர், சூத்திரர்களும் வேலை பெறுகின்றனர். அரசியல் கட்சிகளை அமைத்து சண்டையிடத் தேவையில்லை. வேத காலத்தில் இதுபோன்று எதுவுமில்லை. அனைவரும் தத்தம் கடமையைச் செய்வதை அரசர் மேற்பார்வையிடுகிறார். அதனால் போலியான அரசியல் கட்சிகளை அமைத்து, போராட்டம் நடத்தி சண்டையிடுவதற்கு மக்களிடம் நேரமில்லாமல் இருந்தது. அதுபோன்ற எதற்கும் வாய்ப்புகள் இல்லை.

இருப்பினும், அனைத்திற்கும் ஆரம்பம், “நான் இந்த உடல் அல்ல” என்பதை உணர்வதேயாகும். பகவத் கீதையில் கிருஷ்ணர் இதனை மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறார்.

வாசகர் கடிதம்

# உடுப்பி கிருஷ்ணர் என்னை அழைக்கின்றாரா?

கிருஷ்ண தரிசனம் எனும் மலரை வெளியிட்டுவரும் உங்களுக்கு எனது பணிவான வணக்கங்கள். உங்களது கடந்த மலரில் (அக்டோபரில்) வந்த உடுப்பி கிருஷ்ணரின் படத்தைப் பார்த்து எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. ஏனெனில் ஒரு 1 1/2 மாதத்திற்கு முன்பு நான் ஒரு கனவு கண்டேன். எனக்கு ஏதோ பிரச்சனை, எனது இரண்டு பிள்ளைகளுடன் நான் உடுப்பிக்குப் போகப் போகிறேன் என்று சொல்கிறேன். அந்த கனவிற்கு முன்பு உடுப்பி என்ற பெயரைக்கூட நான் கேட்டதில்லை. கோவிலுக்குச் சென்று அங்கிருந்த சாதுவிடம் ஆசிர்வாதம் வாங்கியவுடன் விழித்துவிட்டேன். மறுநாள் இணையத்தில் உடுப்பி என்ற ஊர் இருக்கிறதா என்று தேடி அதுகுறித்த விவரத்தைப் பெற்றுக் கொண்டேன். இவையாவும் எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தன. உங்களது மாத இதழில் உடுப்பி கிருஷ்ணரைக் கண்டேன். உடுப்பி கிருஷ்ணர் என்னை உடுப்பிக்கு வரச் சொல்லி அழைக்கிறாரா? இல்லையேல், ஏன் எனக்கு இப்படி ஒரு கனவு வந்தது என்பதை தயவுசெய்து விளக்குவீராக.

கிருஷ்ண அடியேன்,
குமார், சுவிட்சர்லாந்து

## எமது பதில்

ஆன்மீக ஆத்மாக்களான நாம் இரு வகையான உடல்களால் கவரப்பட்டுள்ளோம். மனம், புத்தி, அஹங்காரம் ஆகிய மூன்றும் அடங்கிய சூட்சும உடல் நம்மால் காண இயலாததாகும்; பஞ்ச பூதங்களாலான ஸ்தூல உடலை மட்டுமே நம்மால் காண முடியும். மரணத்தின்போது நாம் நமது ஸ்தூல உடலை மட்டுமே கைவிடுகிறோம்; மற்றொரு உடலை அடையும்போது ஆத்மாவுடன் சூட்சும உடலும் உடன் வருகின்றது. எனவே, நமது மனதில் பல்லாயிரக்கணக்கான பிறவிகளில் சேகரிக்கப்பட்ட விஷயங்கள் தேங்கிக் கிடக்கின்றன. நாம் உறங்கும்போது அத்தகு எண்ணங்கள் கனவின் வடிவில் வெளிப்படுகின்றன. மேலும், பெரும்பாலான நேரங்களில் நாம் கண்ட/அனுபவித்த பல்வேறு விஷயங்கள் ஒன்றாகச் சேர்ந்து கனவில் வேறொரு வடிவில் தோன்றும். உதாரணமாக, தங்கத்தையும் மலையையும் நாம் பகல் நேரத்தில் பார்த்தால், இரவு நேரத்தில் தங்க மலையைக் காண்பது போன்ற கனவு நமக்கு வரலாம்.

எப்படிப் பார்த்தாலும், கனவு என்பது கனவே. அதற்குப் பொதுவாக நாம் அதிக முக்கியத்துவம் கொடுப்பதில்லை. இருப்பினும், ஆன்மீக சம்பந்தமான கனவுகள் ஒருவரின் தூய உணர்வை வெளிப்படுத்துகின்றன. கிருஷ்ணரைப் பற்றிய கனவுகள் சிறப்பு வாய்ந்தவை. உண்மையில் கிருஷ்ண பக்தியில் மிகவும் முன்னேறிய நிலையில் இருப்பவர்கள், ஒவ்வொரு நாள் இரவிலும் கிருஷ்ணரைப் பற்றி கனவு காண்பர்; அவர்களுக்கு வேறு எந்தக் கனவும் வராது. (கனவு குறித்து ஒன்பதாம் பக்கத்திலுள்ள ஸ்ரீல பிரபுபாதரின் சிறு கருத்தைப் படிக்கவும்)

நீங்கள் உடுப்பிக்கு வர வேண்டுமா என்று கேட்டுள்ளீர்கள். தங்களுடைய கனவை காரணமாக வைத்து யாம் கூறவில்லை, பொதுவாகவே கூறுகிறோம். மிகச்சிறந்த வைஷ்ணவ ஆச்சாரியரான மத்வர் அவதரித்த பூமிக்கு விஜயம் செய்து, அவரால் வழிபடப் பட்ட விக்ரஹத்தை தரிசிப்பது என்பது அனைவருக்குமே உகந்த ஒன்றாகும்.



# ஸ்ரீமத் பாகவதம்

வேத இலக்கியங்கள் என்னும் மரத்தின் பழுத்த பழமாகக் கருதப்படும் ஸ்ரீமத் பாகவதமே வேத ஞானத்தின் பூரணமான அங்கீகரிக்கப்பட்ட சாஸ்திரமாகும். சுமார் ஐயாயிரம் வருடங்களுக்கு முன்பு தொகுக்கப்பட்ட இந்த வரலாற்றுக் காவியம், மாமுனிவரான கிருஷ்ண துவைபாயன வியாசரால் அவர் எழுதிய வேதாந்த சூத்திரத்திற்கு அவரே வழங்கிய விளக்கவுரையாகும். அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அவர்கள் பன்னிரண்டு காண்டங்கள் கொண்ட அந்த மாபெரும் காவியத்திற்கு பதினெட்டு பெரும் புத்தகங்களில் விளக்கமளித்துள்ளார். அப்புத்தகத்தின் முதல் காண்டத்தினை இப்பத்திரிகையின் ஒவ்வொரு வெளியீட்டிலும் தொடர்ந்து பிரசுரித்து வருகிறோம்.

## சாதுக்களின் கேள்விகள்

### முதல் அத்தியாயம், ஸ்லோகம் 19

வயம் து ந வித்ருப்யாம உத்தம-ஷ்லோக-விக்ரமே
யச்-ச்ருண்வதாம் ரஸ-க்ஞானாம் ஸ்வாது ஸ்வாது பதே பதே

#### மொழிபெயர்ப்பு

மந்திரங்களாலும் பிரார்த்தனைகளாலும் புகழப்படுபவரான முழுமுதற் கடவுளின் தெய்வீக லீலைகளைக் கேட்பதில் நாங்கள் ஒருபோதும் களைப்படைவதே இல்லை. அவருடனான தெய்வீக உறவுகளில் சுவையை விருத்தி செய்தவர்கள் அவரது லீலைகளைக் கேட்பதில் ஒவ்வொரு கணமும் இன்பமடைகின்றனர்.

#### பொருளுரை

பௌதிகமான கதைகள், கட்டுக்கதைகள், வரலாறு போன்றவற்றிற்கும் பகவானின் திவ்யமான லீலைகளுக்கும் இடையில் மிகப்பெரிய வேறுபாடு உண்டு. பிரபஞ்சம் முழுவதிலுமுள்ள வரலாற்றில் பகவானுடைய அவதார லீலைகளைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. இராமாயணம், மஹாபாரதம், புராணங்கள் ஆகியவை பன்னெடுங் காலத்திற்கு முன்பு தோன்றிய பகவானின் பல்வேறு அவதார லீலைகளின் சரித்திரங்களாகும். இதனால் அவற்றை திரும்பத்திரும்ப படித்த பின்பும் அவை பசுமையாகவே உள்ளன. உதாரணமாக, பகவத் கீதையையோ ஸ்ரீமத் பாகவதத்தையோ தன் வாழ்நாள் முழுவதும் திரும்பத்திரும்ப படித்தாலும் அவற்றில் புதுப்புது செய்திகள் தோன்றுவதை ஒருவரால் காண முடியும். ஆன்மீகம் உயிரோட்டம் உள்ளதாகவும் ஜடம் உயிரற்றதாகவும் இருப்பதைப் போலவே, ஆன்மீகச் செய்திகள் உயிரோட்டமிக்கவையாகவும் பௌதிகச் செய்திகள் மந்தமானவையாகவும் உள்ளன. தெய்வீகமான விஷயங்களை அறிவதில் சுவையை வளர்த்துக் கொண்டவர்கள் அத்தகைய வர்ணனைகளைக் கேட்பதில் களைப்படைவதே இல்லை. பௌதிகச் செயல்கள் விரைவில் திகட்டிவிடுகின்றன, ஆனால் தெய்வீகமான பக்தித் தொண்டு எவருக்கும் திகட்டுவதே இல்லை. *உத்தம-ஷ்லோக* என்னும் சொல், அறியாமைக்கு இடமில்லாத இலக்கியம் என்பதைக் குறிக்கின்றது. பௌதிக இலக்கியங்கள் தமோ குணத்தில், அதாவது, இருட்டில் இருப்பவை; ஆனால் தெய்வீக இலக்கியங்களோ முற்றிலும் வேறுபட்டவை. தெய்வீக இலக்கியங்கள் இருட்டின் குணத்திற்கு அப்பாற்பட்டவை. மேலும், அவற்றிலுள்ள தெய்வீக விஷயங்களைத் தொடர்ந்து படித்து உணரும்போது, அதன் ஒளி மேன்மேலும் பிரகாசமடைகிறது. பெயரளவில் முக்தி பெற்றவர்கள் *அஹம் ப்ரஹ்மாஸ்மி* எனும் சொற்களைத் திரும்பத்திரும்ப உச்சரிப்பதில் ஒருபோதும் திருப்தியடைவதில்லை. அத்தகு செயற்கையான பிரம்மன் உணர்வு மதிப்பற்றதாகிவிடுவதால், உண்மையான சுகத்தை அனுபவிப்பதற்காக அவர்கள் ஸ்ரீமத் பாகவதத்தின் வர்ணனைகளை நோக்கித் திரும்புகின்றனர். அத்தகு அதிர்ஷ்டம் பெறாதவர்கள், பொது நலத் தொண்டிலும் மனிதர்களிடம் இரக்கம் கொள்வதிலும் ஈடுபடுகின்றனர். மாயாவாதக் கொள்கை பௌதிகமானது என்பதையும், பகவத் கீதை மற்றும் ஸ்ரீமத் பாகவதத்தின் தத்துவம் தெய்வீகமானது என்பதையுமே இது குறிக்கின்றது.

### ஸ்லோகம் 20

க்ருதவான் கில கர்மாணி ஸஹ ராமேண கேஷவ:
அதிமர்த்யானி பகவான் கூட: கபட-மானுஷ:

#### மொழிபெயர்ப்பு

தன் ஸ்வரூபத்தை மறைத்துக் கொண்டு மனிதரைப் போல நடித்த முழுமுதற் கடவுளான பகவான் ஸ்ரீ கிருஷ்ணர், பலராமருடன் இணைந்து மனித சக்திக்கு மீறிய பல அற்புதங்களைச் செய்தார்.

#### பொருளுரை

மனிதப் பண்புகளைக் கடவுளுக்கு வழங்கும் அந்த்ரோபொமோர்பிசக் (anthropomorphism) கொள்கையும் விலங்குகளின் பண்புகளைக் கடவுளுக்கு வழங்கும் ஜுமோர்பிசக் (zoomorphism) கொள்கையும் புருஷோத்தமரான முழுமுதற் கடவுள் ஸ்ரீ கிருஷ்ணருக்கு ஒருபோதும் பொருந்தக்கூடியவை அல்ல. தவத்தினாலும் விரதத்தினாலும் மனிதன் கடவுளாகலாம் என்னும் கொள்கை தற்போது எல்லா இடங்களிலும், குறிப்பாக இந்தியாவில், தடையின்றி வளர்ந்துள்ளது. ஸ்ரீ இராமர், ஸ்ரீ

கிருஷ்ணர், ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு ஆகியோரை முழுமுதற் கடவுள் என்று வேத நூல்களை அடிப்படையாகக் கொண்டு சாதுக்கள் உரைத்துள்ளனர்; சாதுக்களை நகல் செய்து மனசாட்சியற்ற பல நபர்கள் தங்களது சொந்த அவதாரங்களை உருவாக்கிக் கொண்டுள்ளனர். கடவுளின் அவதாரத்தை உண்டுபண்ணும் இம்முறை, குறிப்பாக வங்காளத்தில் சாதாரண தொழிலாக ஆகியுள்ளது. பிரபலமான எந்தவொரு மனிதனும், யோக சக்திகளால் சில மாயாஜால வித்தைகளைச் செய்து காட்டும்போது, மக்களின் செல்வாக்கைப் பெற்று பரம புருஷரின் அவதாரமாக மாறிவிடுகிறான். பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் அத்தகைய அவதாரமல்ல. அவர் தனது பிறப்பிலிருந்தே உண்மையான பரம புருஷராகத் திகழ்ந்தார். அவரது தாயாகக் கருதப்படுபவரின் முன்பு அவர் நான்கு கைகளைக் கொண்ட விஷ்ணுவாகத் தோன்றினார். பின்னர், தாயாரின் வேண்டுகோளுக்கு இணங்கி குழந்தையாக மாறினார். அதன்பிறகு, உடனே தமது தாயை துறந்து, கோகுலத்திலுள்ள மற்றொரு பக்தரைத் தேடிச் சென்றார். அங்கு நந்த மகாராஜரும் அன்னை யசோதையும் அவரை மகனாக ஏற்றுக் கொண்டனர். அதுபோலவே, பகவான் ஸ்ரீ கிருஷ்ணருக்கு சமமானவரான ஸ்ரீ பலதேவர், ஸ்ரீ வசுதேவரின் மற்றொரு மனைவிக்குப் பிறந்த குழந்தையாகவே கருதப்பட்டார். தமது பிறப்பும் செயல்களும் தெய்வீகமானவை என்றும், அவற்றின் தெய்வீகத் தன்மையை அறியும் அதிர்ஷ்டம் வாய்ந்தவர் உடனடியாக முக்தி பெற்று பகவானின் இராஜ்யத்திற்கு திரும்பிச் செல்வதற்கான தகுதியைப் பெறுகின்றார் என்றும் பகவத் கீதையில் பகவான் கூறியுள்ளார். எனவே, பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் பிறப்பு மற்றும் செயல்களின் தெய்வீகத் தன்மையைப் பற்றிய அறிவு ஒன்று மட்டுமே முக்தியடையப் போதுமானதாகும். பாகவதத்தின் முதல் ஒன்பது காண்டங்களில் பகவானின் தெய்வீகத் தன்மை விளக்கப்பட்டுள்ளது, பத்தாவது காண்டத்தில் அவரது குறிப்பிட்ட லீலைகள் விளக்கப்பட்டுள்ளன. இந்நூலை ஒருவர் தொடர்ந்து படிக்கும்போது இவையெல்லாம் புலப்படும். பகவான் தமது தாயாரின் மடியிலிருந்தபோதே தமது தெய்வீகத் தன்மையைக் காட்டியிருக்கிறார் என்பதையும், அவரது செயல்கள் அனைத்தும் மனித சக்திக்கு அப்பாற்பட்டவை (ஏழு வயதில் அவர் கோவர்தன மலையைத் தூக்கினார்) என்பதையும், இவ்வெல்லாச் செயல்களும் அவரை உண்மையான பரம புருஷ பகவான் என்று நிரூபிக்கின்றன என்பதையும் கவனிக்க வேண்டியது மிகவும் அவசியம். இருப்பினும், அவரது மாயத் திரையின் காரணமாக, அவரது தாயாக, தந்தையாக, உறவினராக அறியப்பட்டவர்கள்



*கிருஷ்ணரின் செயல்கள் அனைத்தும் மனித சக்திக்கு அப்பாற்பட்டவை என்பதை அவர் கோவர்தன மலையைத் தனது சுண்டு விரலால் உயர்த்திப் பிடித்ததிலிருந்து அறியலாம்.*

அவரை ஒரு சாதாரணக் குழந்தையாகவே எப்பொழுதும் ஏற்றுக் கொண்டனர். சில அதியற்புதமான செயல்களை அவர் செய்து காட்டும்பொழுதெல்லாம், அவரது தாய் தந்தையர் அவற்றை வேறொரு பாணியில் புரிந்து கொண்டனர். மேலும், தங்களது மகனிடமிருந்த உறுதியான பெற்றோர் பாசத்தில் அவர்கள் திருப்தி கொண்டவர்களாக இருந்தனர். இவ்வாறாக, மனிதனைப் போல காணப்பட்டபோதிலும், உண்மையில் அவர் சர்வசக்தி படைத்த பரம புருஷ பகவான் என்று நைமிஷாரண்ய முனிவர்கள் விவரிக்கின்றனர்.

## ஸ்லோகம் 21

கலிம் ஆகதம் ஆக்ஞாய க்ஷேத்ரே 'ஸ்மின் வைஷ்ணவே வயம்
ஆஸீனா தீர்க-ஸத்ரேண கதாயாம் ஸக்ஷணா ஹரே:

## மொழிபெயர்ப்பு

கலி யுகம் துவங்கிவிட்டதை நன்குணர்ந்து, பரம புருஷரைப் பற்றிய திவ்யமான செய்திகளை நீண்ட நேரம் தொடர்ந்து செவியுறுவதன் வாயிலாக, யாகம் இயற்றுவதற்காக, இந்த புனித ஸ்தலத்தில் நாங்கள் கூடியுள்ளோம்.

## பொருளுரை

பொற்காலமாகிய சத்ய யுகம், வெள்ளி காலமாகிய திரேதா யுகம், செம்பு காலமாகிய துவாபர யுகம் ஆகியவற்றுடன் ஒப்பிடும்போது, இந்த கலி யுகம் தன்னுணர்வு பெறுவதற்குச் சற்றும் பொருத்தமில்லாததாக உள்ளது. சத்ய யுகத்தில், ஒரு இலட்சம் ஆண்டுகளை ஆயுளாகக் கொண்ட மக்கள் தன்னுணர்விற்காக நீண்டகால தியானத்தில் ஈடுபட முடிந்தது. திரேதா யுகத்தில், பத்தாயிரம் ஆண்டுகள் ஆயுளாக இருந்தபோது, மிகப்பெரிய யாகங்களைச் செய்வதன் மூலமாக தன்னுணர்வு அடையப்பட்டது. மேலும், துவாபர யுகத்தில், ஆயிரம் ஆண்டுகள் ஆயுளாக இருந்தபோது, இறைவனுக்கு பூஜை செய்வதன் மூலமாக தன்னுணர்வு அடையப்பட்டது. ஆனால், நூறு ஆண்டுகளை மட்டுமே அதிகபட்ச ஆயுளாகக் கொண்டு, அதனுடன் பல்வேறு கஷ்டங்களைக் கொண்டுள்ள இக்கலி யுகத்தில், பகவானின் திருநாமம், புகழ், லீலைகள் ஆகியவற்றைக் கேட்பதும் பாடுவதுமே தன்னுணர்வு பெறுவதற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ள முறையாகும். நைமிஷாரண்ய முனிவர்கள், பகவானின் பக்தர்களுக்கே உரித்தான அவ்விடத்தில் இவ்வழிமுறையை ஆரம்பித்தனர். தொடர்ந்து ஓராயிரம் ஆண்டுகளாக பகவானின் லீலைகளைக் கேட்பதற்கு அவர்கள் தங்களை தயார் செய்து கொண்டனர். இம்முனிவர்களின் உதாரணத்தின் மூலமாக, பாகவதத்தைத் தொடர்ந்து கேட்பதும் உரைப்பதுமே தன்னுணர்வு பெறுவதற்குரிய ஒரே வழி என்பதை உணர வேண்டும். மற்ற முயற்சிகள் நேரத்தை வீணடிப்பவை மட்டுமே; ஏனெனில், அவை எவ்விதமான நற்பலன்களையும் அளிப்பவை அல்ல. பாகவத தர்மம் என்னும் இவ்வழிமுறையை பகவான் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு பிரச்சாரம் செய்தார். இந்தியாவில் பிறந்தவர்கள் அனைவரும் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் செய்திகளைப் பரவலாக விநியோகம் செய்யும் பொறுப்பை ஏற்க வேண்டும் என்று அவர் பரிந்துரை செய்துள்ளார். பகவத் கீதையின் செய்திகளை முதலில் வழங்க வேண்டும்; பகவத் கீதையின் போதனைகளில் ஒருவர் உறுதியாக நிலைபெற்ற பின்னர், ஆன்மீகத் தன்னுணர்வில் மேலும் முன்னேற்றம் பெற ஸ்ரீமத் பாகவதத்தைக் கற்கும் பணியை அவர் மேற்கொள்ளலாம். (தொடரும்)

## கௌடீய வைஷ்ணவ நாள்காட்டி

**(ஜனவரி 1, 2011 முதல் பிப்ரவரி 15, 2011 வரை)**

### ஜனவரி

5, புதன், ஸ்ரீ லோசன தாஸ தாகூர் தோன்றிய நாள்

7, வெள்ளி, ஸ்ரீ ஜீவ கோஸ்வாமி மறைவுநாள்

16, ஞாயிறு, புத்ரத ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிப்பதற்கான நேரம் 06:38–08:30

24, திங்கள், இராமசந்திர கவிராஜர் மறைவு நாள்
ஸ்ரீ கோபாலபட்ட கோஸ்வாமி தோன்றிய நாள்

25, செவ்வாய், ஸ்ரீ ஜெயதேவ கோஸ்வாமி மறைவு நாள்

26, புதன், ஸ்ரீ லோசன தாஸ தாகூர் மறைவு நாள்

30, ஞாயிறு, சத்-தில ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிப்பதற்கான நேரம் 06:38–10:32

### பிப்ரவரி

8, செவ்வாய், ஸ்ரீமதி விஷ்ணுபிரியா தோன்றிய நாள்
ஸ்ரீ விஸ்வநாத சக்ரவர்த்தி தாகூர் மறைவு நாள்
ஸ்ரீ புண்டரீக வித்யாநிதி தோன்றிய நாள்
ஸ்ரீ ரகுநந்தன தாகூர் தோன்றிய நாள்
ஸ்ரீ ரகுநாத தாஸ கோஸ்வாமி தோன்றிய நாள்

10, வியாழன், ஸ்ரீ அத்வைத ஆச்சாரியர் தோன்றிய நாள்
மதியம் வரை விரதம்

12, சனி, ஸ்ரீ மத்வாசாரியர் மறைவு நாள்

13, ஞாயிறு, ஸ்ரீ இராமானுஜாசாரியர் மறைவு நாள்

14, திங்கள், பௌமி ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிப்பதற்கான நேரம் 06:35–10:31
வராஹ தேவருக்கான விரதம் இன்றே அனுசரிக்கப்படுகிறது

15, செவ்வாய், வராஹ துவாதசி, பகவான் வராஹரின் அவதாரத் திருநாள்

(தமிழகத்தின் மையப் பகுதியான திருச்சியை அடிப்படையாக வைத்துக் கணக்கிடப்பட்டுள்ளது, ஏகாதசி விரதத்தை முடிப்பதற்கான நேரம் மற்ற இடங்களில் சற்று வேறுபடும்.)

# தமிழகத்திலுள்ள இஸ்கான் கோவில்களின் முகவரிகள்

**ஓசூர்**—இராமர் கோவில் வளாகம், நேதாஜி ரோடு, ஓசூர் - 635 019. தொலைபேசி: (04344) 226222. மின்னஞ்சல்: iskcon_hosur@rediffmail.com

**கும்பகோணம்**—56/49, சௌராஷ்டிரா பெரிய தெரு, கும்பகோணம் - 612 001. தொலைபேசி: 99949 49108. மின்னஞ்சல்: vanamali.gopal.jps@pamho.net

**கோயமுத்தூர்**—ஸ்ரீ ஜகன்னாதர் கோயில், ஹரே கிருஷ்ண நிலம், 100 அடி நியூ ஸ்கீம் ரோடு, CIT கல்லூரி எதிர்புறம், கோயமுத்தூர் - 641 014. தொலைபேசி: (0422) 2574508, 2574812, 2574813. மின்னஞ்சல்: bhakti.vinoda.swami@pamho.net. www.iskcon-coimbatore.org

**சென்னை**—ஹரே கிருஷ்ண நிலம், பக்திவேதாந்த ஸ்வாமி சாலை, கிழக்குக் கடற்கரைச் சாலை, சோழிங்கநல்லூர் அஞ்சல், அக்கரை, சென்னை - 600 119. தொலைபேசி: (044) 24530920/21/22/23, 24343266, 32911472 மின்னஞ்சல்: iskconchennai@gmail.com www.iskconchennai.com

அலுவலக முகவரி: புது எண் 23, முதல் மெயின் ரோடு, கே.பி, நகர், அடையார், சென்னை - 600 020. தொலைபேசி: (044) 24456199. மின்னஞ்சல்: iskconoffice@gmail.com

**சேலம்**—ஹரே கிருஷ்ண நிலம், கருப்பூர், சேலம் - 636 012. தொலைபேசி: (0427) 2001686, 2345545, 94421 53427. மின்னஞ்சல்: iskcon.salem@pamho.net www.iskconsalem.com

**திருநெல்வேலி**—10B, திருவனந்தபுரம் ரோடு, வண்ணாரப் பேட்டை ரவுண்டானா அருகில், திருநெல்வேலி - 627 002. தொலைபேசி: (0462) 2501640. மின்னஞ்சல்: iskcon.tirunelveli@pamho.net

**நாகர்கோயில்**—418, KP ரோடு, நாகர்கோயில் - 629 002. தொலைபேசி: 98946 00108. மின்னஞ்சல்: iskcon.kanyakumari@gmail.com

**மதுரை**—12/37. மணிநகரம் மெயின் ரோடு, மதுரை - 625 001. தொலைபேசி: (0452) 2346472. மின்னஞ்சல்: iskcon.madurai@pamho.net

**வேலூர்**—10/12, 10வது கிழக்குக் குறுக்குத் தெரு, காந்திநகர், வேலூர் - 632 006. தொலைபேசி: (0416) 2241654, 94429 53417. மின்னஞ்சல்: akincan_bvks97@rediffmail.com

**ஸ்ரீரங்கம், திருச்சி**—ஹரே கிருஷ்ண நிலம், 107, அம்மா மண்டபம் சாலை, ஸ்ரீரங்கம், திருச்சி - 620 006. தொலைபேசி: (0431) 2433945.

---

**பாண்டிச்சேரி**—41, 8வது குறுக்குச் சாலை, முதல் தளம், ரெயின்போ நகர், பாண்டிச்சேரி - 605 011. தொலைபேசி: 94434 68923, 99408 64086. மின்னஞ்சல்: sarvananda2003@yahoo.com

## சிறிய (நாமஹட்டா) மையங்கள்

**தேன்கனிக்கோட்டை**—கிருஷ்ண பலராமர் ஆலயம், ஹரே கிருஷ்ண ரோடு, அன்செட்டி மெயின் ரோடு, தேன்கனிக்கோட்டை.

**நாமக்கல்**—இஸ்கான் நாமஹட்டா மையம், ஸ்ரீ செல்வம் பிளாசா மாடியில், நரசிம்மர் கோவில் எதிரில், கோட்டை, நாமக்கல் - 637 001. தொலைபேசி: 94421 53427, 97885 84802.

**பெரம்பூர், சென்னை**—7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. தொலைபேசி: 98400 87067. மின்னஞ்சல்: jgd@pamho.net

**நெய்வேலி**—E53, அண்ணா சாலை, பிளாக்-26, நெய்வேலி - 607 803. தொலைபேசி: 98945 30533.

**தர்மபுரி**—180, பை-பாஸ் ரோடு, அரசு மருத்துவமனை அருகில், சேலம் மெயின் ரோடு, தர்மபுரி. தொலைபேசி: 97886 16028.

இவை தவிர மேலும் பல்வேறு இடங்களில் சிறிய அளவில் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. மேலும் விவரங்களுக்கு தங்களுக்கு அருகிலுள்ள முக்கிய மையங்களைத் தொடர்பு கொள்ளவும்.

இந்தியாவின் இதர இடங்களில் உள்ள மையங்களின் முகவரியையும் உலகளாவிய மையங்களின் முகவரியையும் அறிய, தங்களுக்கு அருகிலுள்ள இஸ்கான் மையங்களை அணுகவும். அல்லது www.krsna.com என்ற இணைய தளத்தில் காணவும்.

# ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
# ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே



நவீன சமுதாயத்தின் பல்வேறு பிரச்சனைகளால் சிக்கித் தவிக்கும் நம் போன்ற மனிதர்களைக் காப்பாற்றுவது அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் உன்னதக் குறிக்கோளாகும். ஆன்மீகத் தன்னுணர்வை மறந்து, முன்னேற்றம் என்ற பெயரில் புலனின்பமே பிரதானம் என்று திகழும் நவீன நாகரிகம், நம்மை விலங்குகளாக்கி வருகிறது. நாம் நமது முன்னேற்றத்தினை நிறுத்திவிட வேண்டும் என்பதல்ல; மாறாக, ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண, ஹரே ஹரே/ ஹரே ராம, ஹரே ராம, ராம ராம, ஹரே ஹரே என்னும் மஹா மந்திரத்தை மையமாகக் கொண்டு, ஆன்மீக எழுச்சி பெறுவதற்கான உன்னத வழிமுறையை ஏற்றுக்கொள்ள வேண்டும். இறைவனின் திருநாமங்களான இந்த தெய்வீக ஒலியதிர்வுகள், அமைதியும் ஆனந்தமும் கொண்ட திவ்யமான சூழ்நிலையை உடனடியாக ஏற்படுத்தவல்லவை. ஜடவுலக முன்னேற்றம் என்னும் வரம்புகளைக் கடந்து கிருஷ்ண பக்தியின் ஆனந்தமயமான தெய்வீக சூழ்நிலையினுள் நுழைவதற்கு நம் மனித சமுதாயத்திற்கு உதவுவதே இந்த ஸ்ரீ கிருஷ்ண தரிசனத்தின் குறிக்கோளாகும்.




தங்கமயில்
தங்கம் + வைரம் + வெள்ளி + பிளாட்டினம்

தங்கம் வாங்க, தங்கமயிலுக்கு வாங்க
124, நேதாஜி ரோடு, மதுரை. போன்: 0452 2345553

இராஜபாளையம்
813, தென்காசி ரோடு, இராஜபாளையம்.
போன்: 04563 225553

காரைக்குடி
333, செக்காலை ரோடு, காரைக்குடி.
போன்: 04565 400553

இராமநாதபுரம்
262, சாலைத்தெரு, இராமநாதபுரம்.
போன்: 04567 225553

திண்டுக்கல்
1, சாலை ரோடு, திண்டுக்கல்.
போன்: 0451 2440553

தேனி
1244, பெரியகுளம் ரோடு, தேனி.
போன்: 04546 251553

சிவகாசி
144A, N.R.K.R. ரோடு, சிவகாசி.
போன்: 04562 278553

தூத்துக்குடி.
351, WGC. ரோடு, தூத்துக்குடி.
போன்: 0461 2337553